மலர்-3 இதழ்-70 ஜூலை 16-31 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

**உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்**



ஆன்மிகமலர்
mobile app
GET IT ON
Google Play

e- magazine

வெற்றிகரமாக

70 வது இதழ்

# 100% வெற்றி தரும் ஜென்ம நட்சத்திர ரகசியம்

# சிறிது துளசியை சேர்த்து கொடுங்க...

வீட்டில் துளசியை வளர்ப்பது மிகச் சிறப்பு. காலையில் எழுந்ததும் துளசியைத் தரிசிப்பதால் நம் தீவினைகள் மறையும். தானம் கொடுக்கும்போது சிறிது துளசியுடன் தானம் கொடுக்க வேண்டும். மகாலட்சுமியின் வாசம் நிறைந்த துளசியுடன் தானம் கொடுக்கும்போது,பெறுபவருக்கும் கொடுப்பவருக்கும் மகாலட்சுமியின் ஆசி பரிபூரணமாக கிடைக்கும், துளசியோடு தரப்படாத தானம் வீண் என்று முன்னோர் வரையறைத்துள்ளனர்.





செல்வத்திற்குரிய தெய்வங்களான வெங்கடாஜலபதி, லட்சுமி, குபேரன் ஆகியோர் படங்களை வீட்டின் வெளிப்புறம் பார்த்து இருக்குமாறு மாட்டக்கூடாது.

ஈர உடையுடனும், ஒராடையுடனும், தலைகுடுமியை முடியாமலும், தலையிலும், தோளிலும் துணியை போட்டுக் கொண்டோ, கட்டிக் கொண்டோ வழிபாடு செய்யக் கூடாது.





சாமிக்கு படைக்கும் போது வாழை இலை போட்டு படைக்கிறோம். அப்படி வாழை இலை போடும் போது வாழை மரத்திலிருந்து நறுக்கப்பட்ட பகுதி சுவாமி படத்திற்கு வலது பக்கம் வரவேண்டும்.

# பூஜை அறை படங்கள்



பூஜை அறையிலோ, வீட்டிலோ தெய்வப் படங்களை கிழக்கு நோக்கி வைக்க வேண்டும். வணங்குபவர் தெற்குப் பகுதியில் வடக்குத் திசையைப் பார்த்தவாறு அமர்ந்து வணங்கலாம். தெற்கு நோக்கி தெய்வப் படங்களை வைக்கக் கூடாது. கிழக்குப் பக்கம் முடியாவிட்டால் தெற்குப் பக்கத்தைத் தவிர பிற திசைகளைப் பார்த்து படங்களை வைக்கவும்.

பூஜை செய்பவர் தெற்கு, தென் கிழக்கு, தென்மேற்கு ஆகிய திசைகளைப் பார்த்து கொண்டு உட்கார்ந்து பூஜை செய்யக்கூடாது.





# வாசலில் சாமி இருந்தால் நல்லது



ஸ்வஸ்திக், ஸ்ரீ சக்கரம், ஓம் மற்றும் திரிசூலம் சின்னங்களை வாசல் கதவிலோ அல்லது வாசலின் உள்ளே நேர் எதிரேயோ ஒட்டி வைப்பது பாதுகாப்பிற்கும், அதிர்ஷ்டத்திற்கும் உதவும். வெளியே செல்லும்போது சட்டைப் பையிலும் வைத்துக் கொள்ளலாம். வாசலுக்கு நேர் எதிரே வாசலைப் பார்த்து சிரிக்கும் புத்தரை வைப்பது வளமை, வெற்றி, தனலாபம் ஆகியவை அளிக்க வல்லது.

அன்னம் முதலியவற்றை எவர்சில்வர் பாத்திரங்களில் நேரடியாக வைத்து தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யக்கூடாது. பாத்திரத்தில் இலை வைத்து அதில் உணவை வைத்து நிவேதனம் செய்யலாம்.





பகவானின் மந்திரத்தை சொல்லி பிரார்த்திக்க தெரிந்தவர்களுக்கு எப்போதும் எல்லாமே வெற்றிதான். காலையில் விழித்தவுடன் நாராயணனையும் இரவு தூங்கு முன் சிவபெருமானையும் நினைக்க வேண்டும்.

பூஜை செய்யும் நேரத்தில் பெண்கள் குங்குமம் வைத்துக் கொள்ளவேண்டும் ஸ்டிக்கர் பொட்டு கூடாது. உறவினர்களை வெளியூர் செல்ல வழியனுப்பிய பிறகு பூஜை, முதலியவைகளை செய்யக் கூடாது.



# விஷ்ணு கோவிலில் தரிசனம் முடித்தபின் உட்காராதீர்கள்



விஷ்ணுவை வணங்கி வீடு திரும்புபோது லட்சுமி தேவியும் நம்முடன் நம் வீட்டுக்கு வருகிறாள் என்பது ஐதீகம். ஆகவே விஷ்ணு கோவிலிலிருந்து வீடு திரும்புமுன் அங்கே உட்காரக் கூடாது.

வீடுகளில் பூஜை செய்யும்போது கடவுள் உருவங்களின் பாதங்கள் மற்றும் முகத்தைப் பூக்களால் மறைத்து விடக்கூடாது. முகமும், பாதமும் திறந்து நிலையில் இருக்க வேண்டும்.

# அர்ச்சனை தட்டை தொட்டு வணங்குவதற்கான காரணம்

கோயிலுக்கு சென்றால் பல்வேறு விஷயங்களை நாம் காரணம் காரணமின்றி எதுவும் செய்வதில்லை, அந்தவகையில் இறைவனுக்கு செய்யப்படும் அர்ச்சனையிலும் ஒரு சில விதிமுறைகள் உள்ளன.

அந்த வகையில் கோயில் சென்று ஒருவர் தனது கோத்திரம் பெயர் நட்சத்திரத்தை கூறி சங்கல்பம் செய்து இறைவனை அர்ச்சனை செய்து வழிபட்டு தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

ஒருவருக்கு இந்த இடத்தில், இந்தக் காலத்தில், இப்படி ஒரு வேண்டுதலை முன்னிட்டு இன்ன பூஜை செய்யப்படுகிறது என்று சொல்லி பூஜை செய்வதே சங்கல்பமாகும். இப்படியான சங்கல்பத்தின் பொருட்டே அர்ச்சனை தட்டை தொட்டுக் கும்பிடச் சொல்வார்கள். அர்ச்சனை செய்வது இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் இருக்கலாம்.

அல்லது வாழ்வில் இன்னும் மேம்பட இறைவனை வேண்டுவதற்காக இருக்கலாம்.

துன்பங்களை தாங்கும் மன உறுதி கேட்கலாம். கோயிலில் அர்ச்சனை செய்வது வீட்டில் பூசை செய்வதை காட்டிலும் சக்திவாய்ந்தது.

அங்கிருக்கும் தெய்வம் மந்திர உச்சாடனாங்களாலும், பூஜை வழிபாடுகளாலும் மிகவும் சக்தி பெற்றதாக திகழ்கிறது.

ஆலயங்களில் பக்தர்கள் தனித்தனியாக அர்ச்சனை செய்வது காம்ய பூஜை ஆகும். அதாவது நாம் ஒன்றை வேண்டிக் கொண்டு நம்முடைய பிரார்த்தனையைக் கடவுளிடம் சமர்ப்பிப்பது காம்ய பூஜை.

சுவாமியின் பெயரில் அர்ச்சனை செய்தல் கூடாது.

தாங்கள் தனியாக ஆலயத்திற்குச் சென்று வழிபட்டாலும் கூட்டத்துடன் சேர்ந்து வழிபட்டாலும் இறைவனின் அருள் அனைத்து ஜீவராசிகளுக்கும் நன்மையே செய்யும்.

அதன் பொருட்டே ஆலயங்களில் ஆகம முறைப்படி இன்றளவும் பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

அவர்கள் அனுதினமும் சங்கல்பம் செய்து கொண்டு பூஜைகளைத் தொடங்குவார்கள்.

கோயிலுக்கு வரும் பக்தர்கள் அர்ச்சனை செய்ய விரும்பினால் தட்டிலுள்ள புஷ்பத்தையோ, குங்குமத்தையோ அவர்களின் பெயர், நட்சத்திரத் தைக் கூறி தொடச் சொல்வது மரபு. இந்தச் செயல் ஒரு ஆத்ம தொடர்பை ஏற்படுத்தும் அற்புதமான செயல்பாடாக கருதப்படுகிறது.






அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033



# மனக்கவலையால் அவதிப்படுகிறீர்களா? சந்திரனிடம் கூறுங்கள்

நம் வாழ்க்கையில் சில நேரம் நாம் கடும் மனவேதனைக்கு உள்ளாகி இருப்போம் நம் மனவேதனையை சொல்லி அழ கூட நம் அருகில் ஒரு துணை இருக்காது நண்பர்கள் தாய் தந்தை என யாரும் அருகில் இருக்காத தருணம் அது.

அத்தருணத்தில் நம் மனம் ஆனது யாரிடமாவது தன் வேதனையை பகிர்ந்து கொள்ள மாட்டோமா? எங்கையாவது இச் சுமையை இறக்கி வைக்க மாட்டோமா? என்று அலைந்து கொண்டிருக்கும்.

இதுபோன்று உங்கள் மனமும் அலைந்து கொண்டிருக்கிறது என்றால், வான் நிலவிடம் அதை பகிர்ந்து கொள்ளுங்கள் உங்கள் மனவேதனைகளையும் மனசுமைகளையும் நிலவிடம் இறக்கி வைத்து விடுங்கள் ஒரு தாயிடம் உங்கள் வேதனையை சொல்லி அழுந்த திருப்தி உங்களுக்கு கிடைக்கும்.

ஏன் என்றால் சந்திரனை தான் தாய் என்று சொல்கிறது ஜோதிடம் ஒரு தாயிடம் இருக்கும் நற்குணங்கள் அனைத்தும் சந்திரனிடமும் காணப்படும் ஆகையால் நிலவிடம் உங்கள் மனகவலையை சொல்வது என்பது உங்கள் தாய்யிடம் சொல்வதற்கு சமம்.

அது மட்டும் இல்லாமல் சந்திரன் தான் மனோகாரகன் மனம், எண்ணம், பாசம், உணர்வு, கருணை போன்ற விசயங்களுக்கு எல்லாம் அதிபதி அவனே. ஜோதிடத்தின் படி ஒருவனின் ஜாதகத்தில் சந்திரன் நல்லபடியாக இருந்தால் தான் அவனால் மனகவலை மனகுழப்பம் இன்றி மகிழ்ச்சியாக வாழ முடியும். சந்திரன் மோசமான நிலையில் உள்ளவர்கள் தான் மனகவலை மனநலம் பாதிப்பு போன்ற பிரச்சனைகளால் பாதிக்கப்படுகின்றனர்.

தளபதி படத்தில் "சுந்தரி கண்ணால் ஒரு செய்தி" என்ற பாடலில் "வாநிலவை நி கேளு கூறும் என்வேதனை" என்ற வரிகள் இடம்பெறும் அவ்வரிகளில் கவிஞர் வாலி கூறும் கருத்து என்னவென்றால் நம் மன வேதனையை பகிர்ந்து கொள்ள சிறந்த இடமாக விளங்குவது வாநிலவே என்ற கருத் தையே அவ்இடத்தில் வாலி ஆழமாக பதிவு செய்திருப்பார்.

நம் மனவேதனைகளை தீர்க்க மட்டும் தான் நிலவு பயன்படுகிறதா என்றால் அதுவும் கிடையாது.

வேறு ஒரு அற்புதத்தையும் சந்திரனால் செய்ய இயலும் அது என்னவென்றால் நம் மன எண்ணங்களுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றல்.

அதாவது சந்திரனிடம் நம் மனஎண்ணங்களை விதைத்தோம் என்றால் அது நிச்சயம் ஒரு நாள் மரமாகும் ஏனென்றால் நிலவு நீர் தத்து வத்தை தாங்கி நிற்கும் கிரகம் நீருக்கு நம் எண்ணங்களை பதிவு செய்யும் சக்தி உள்ளது.

இதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு




ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com



மூலம் சொல்ல வேண்டும் என்றால் நாம் நீரில் நின்று கொண்டு இருக்கும்போதோ அல்லது நம் உடல் முழுக்க நீரால் நனைந்து இருக்கும் போதோ நாம் Subconscious எனப்படும் நடுமனதிற்கு செல்கிறோம் இந்த நடுமனதில் பதிவு செய்ய படும் எந்த ஒரு விசயமும் அவ்வளவு எளிதாக அழியாது.

அது மட்டும் இல்லாமல் நிச்சயம் ஒரு நாள் அவை அனைத்தும் நிறைவேறும் ஏனென்றால் நடுமனதின் ஆற்றல் அப்படி (Subconscious memory power). ஆகையால் தான் பெரும்பான்மையான மதசடங்குகள் நீரில் நனைந்த படி செய்கின்றனர் (காவடி எடுத்தல், பால் குடம், அங்கபிரதட்சணம் etc..) அதாவது நிலவு என்னும் நீர் தத்துவத்தை தாங்கி நிற்கும் கிரகத்திடம் நம் எண்ணங்களை பதிவு செய் தோம் என்றால் அந்த நீர் கிரகமான சந்திரன் நிச்சயம் ஒரு நாள் நாம் மனதில் நினைத்த எண்ணங்களை நிறைவேற்றி தரும்.

உடனே யாரும் சந்திரனிடம் சென்று தங்கள் மன எண்ணங்களை பரிமாறி கொள்ள நினைக்க வேண்டாம் ஏனென்றால் சந்திர வழிபாட்டிற்கு முக்கியமே நாள் தான்.

தப்பித்தவறி கூட தேய்பிறை அன்று சந்திரனிடம் உங்கள் மனகவலையை சொல்ல வேண்டாம் அப்படி செய்தீர்கள் என்றால் உங்கள் மனகவலை அதிகரிக்குமே தவிற குறையாது ஏனென்றால் தேய்பிறை அன்று சந்திரனே நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்து கொண் டிருப்பவன்.

ஒரு வளர்ந்து வரும் நிறுவனத்திடம் (Company) சென்று நீங்கள் வேலை கேட்டால் உங்களுக்கு அந்த நிறுவனத்தால் வேலை தர இயலும் அதுவே நாளுக்கு நாள் நட்டம் அடைந்து வரும் நிறுவனத்திடம் சென்று வேலை கேட்டால் அந்த நிறுவனத்தால் உங்களுக்கு எப்படி வேலை தர முடியும்.

ஏன்டா இங்க இருப்பவர்களுக்கே நாளைக்கு வேலை இருக்குமானு தெரியாது இதுல ஒனக்கு வேற வேல வேனுமா என்று உங்களை திட்டி தான் அனுப்புவார்கள்.

அதை போல் தான் சந்திரனும் வளர் பிறையின் போது வழிபட்டால் வரங்களை தருவான் காரணம் அப்பொழுது அவன் வளர்ந்து கொண்டிருப்பான், மகிழ்ச்சி மட்டுமின்றி செல்வச் செழிப்புடன் வாழ்ந்துக் கொண்டிருப்பான்.

அதுவே தேய்பிறை அன்று கேட்டால் சாபம் தான் கிடைக்கும், காரணம் அப்பொழுது அவனேவீழ்ந்து கொண்டிருப்பவன்.அவனை கைபிடித்து தூக்கி விடவேபிறர் உதவி தேவைப்படும் சூழ்நிலையில் சந்திரன் இருப்பான்.

ஆக சந்திரனை யாரும் வழிபட நினைத்தால் வளர்பிறை அன்று வழிபடுங்கள் குறிப்பாக மூன்றாம் பிறை அன்று, காரணம் அன்று தான் சந்திரன் தேய்பிறை அடுத்து வானில் காட்சி தரும் முதல் நாள்.

அதாவது மூன்று நாட்களுக்கு பிறகு சந்திரன் வானில் தெரியும் முதல் நாள்தான் மூன்றாம் பிறை.

இதை நான் ஒன்றும் வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று சொல்லவில்லை செய்முறையில் செய்து பார்த்து, நல்லபலன் அடைந்த பிறகு தான் பதிவு செய்கிறேன். ஆக நீங்களும் முடிந்தால் இதை செய்து பார்த்த பிறகு எப்படி உணர்கிறீர்கள் என்பதை மறவாமல் குறிப்பிடுங்கள், ஏதேனும் சந்தேகம் இருந்தால் தொடர்பு கொள்ளுங்கள்.

– கோகுல மணிகண்டன் சான்றார்
தொடர்பு எண்: 09677359474





இலவச இதழ்

ஆன்மிகமலர் மெயில் புக்







உங்களது மொபைல் போனில் படிக்க....

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
ஆன்மிகமலர் இ-புத்தகம் படிக்கலாம்.

# குண்டோதரனின் தாகம் தீர்க்க நதிகளை இணைத்து வைத்த சிவபெருமான்

மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமண விருந்து தடபுடலாக தயாராகிக் கொண் டிருந்தது. தங்கள் வீட்டு விருந்து பற்றி மீனாட்சி சிவனிடம் பெருமையடித்துக் கொண்டிருந்தாள். "உங்களோடு வந்திருப்பவர்களை உடனடியாய் சாப்பிடச் சொல்லுங்க. இங்கு பல்வேறு உணவு கள் கொட்டிக் கிடக்கின்றது. நேரத்திற்கு சாப்பிடாவிட்டால் அனைத்தும் வீணாகி விடுமே!"ன்னு கிண்டலடிக்க...,

"இப்போது எங்கள் யாருக்கும் பசியில்லை. எனது கணங்களில் ஒன்றான குண்டோதரனுக்கு மட்டும் பசிக்கின்றதாம். அவனுக்கு மட்டும் விருந்து வையுங்கள்" என்று சுந்தரேஸ்வரர் சொல்லி இருக்கிறார்.

மலை மலையாக குவிக்கப்பட்ட விருந்து சாப்பாட்டை குண்டோதரன் ஒரு நொடியில் விழுங்கி "இன்னும் கொண்டா"வென வாய் பிளந்து நின்றான்.

குண்டோதரனை கண்டு மீனாட்சி திக்கித்து நின்று, தன் தவறை உணர்ந்து சுந்தரேஸ்வரரிடம் தஞ்சம் புகுந்தாள்.

ஐயனும் அன்னப்பூரணியை அழைத்து அவன் பசியை தீர்க்கச் சொன்னார். அன்னை அளித்த உணவுகளை சாப்பிட்டு, ஏரி, குளம், வாய்க்காலில் இருந்த தண்ணீரை குடித்தும் அவன் தாகம் அடங்காமல் ஈசனிடம் முறையிட்டான்.



சிவபெருமான் தன் தலைமுடியைச் சாய்த்து கங்கையை கீழே இறங்கச் சொன்னார்.

"மதுரை நகருக்கு உடனே தண்ணீர் தேவைப்படுகிறாது. கங்கா! நீ பிரவாக மெடுத்து ஆறாக இந்நகரின் வழியே ஓடிவா," என்றார்.

கங்கையும் சிவனின் கட்டளையை ஏற்று, "சுவாமி! தங்கள் சித்தப்படியே செய்கிறேன். உங்கள் திருமணநாளன்று உருவாகும் பாக்கியம் பெற்ற என்னில் மூழ்கி எழுபவர்கள் பிறப்பற்ற நிலையாகிய மோட்சத்தை அடைய அருள்பாலிக்க வேண்டும்" என வேண்டினாள்.

"கங்கா! மோட்சத்தலங்களான வைகுண்டத்தின் முதல் எழுத்தாகிய "வை"கைலாயத்தின்முதல்எழுத்தாகிய "கை" இவை இரண்டையும் இணைத்து நீ "வைகை" என வழங்கப்படுவாய். உன்னில் குளிப்பவர்கள், தீர்த்தமாகப் பருகுபவர்களுக்கு மோட்சம் கிட்டும். அவர்கள் சகல செல்வங்களோடும் வசிப்பார்கள்" என்றார்.

பின்னர் கங்காதேவி, ஆறாக வேகமாக ஓடிவந்தாள். அவளுக்கு வேகவதி என்ற பெயர் உண்டாயிற்று.

குண்டோதரன் அந்த ஆற்றின் இருகரைகள் மீதும் கைகளை விரித்து வைத்துக் கொண்டு ஆற்றின் போக்கை தடுத்து தண்ணீர் அருந்தி தாகம் தீர்ந்தான்.

இதனாலும் இந்த நதிக்கு வைகை என்று பெயர் வந்ததாக சொல்வர். தன் தாகம் தீர்த்த வைகை சிவனின் தலையில் இருந்து தோன்றியதால் அதற்கு சிவதீர்த்தம் என்னும் புனித பெயரும் வைத்தான்.

கங்கையை பூலோகத்தில் வைகையுடன் இணைத்து, அன்றே நதிநீர் இணைப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளார் சிவ பெருமான்.



# உலகமலர்கள் அனைத்தும் பெறும் வெங்கடாஜலபதி

www.aanmeegamalar.com



திருமலை திருப்பதியில் உறையும் ஸ்ரீவெங்கடேச பெருமாள் என்றாலே நம் நினைவுக்கு வருவது, அவருடைய அலங் காரத் திருக்கோலம்தான். திருமால் அலங் காரப் பிரியன்தான் என்றாலும், உலகின் பணக்காரக் கோயிலான திருமலையில் அருளாட்சி செலுத்தும் திருமகள் நாயகனாம் ஸ்ரீநிவாசப் பெருமாளுக்குச் செய்யப்படும் அலங்காரம் உலகப்புகழ் பெற்றது. ஆபரணங் களைப் பொறுத்தவரை ஸ்ரீநிவாசப் பெருமாளுக்குத் தினமும் 65 முதல் 70 கிலோ வரையிலான தங்க ஆபரணங்கள் சூட்டப்படுகின்றன.

மலர்களும் வாசனைத் திரவியங்களும் மட்டுமே பல லட்சம் ரூபாய் ஆகிறது. ஸ்பெயின் நாட்டின் குங்குமப்பூ, சீனத்துப் புனுகு, நேபாளத்திலிருந்து கஸ்தூரி, மைசூரின் சந்தனம், தமிழகத்துப் பச்சைக் கற்பூரம் என வாசனைத் திரவியங்கள் உலகெங்குமிருந்து வருகின்றன. ஐரோப்பாவின் ரோஜாக்களும், ஆஸ்திரேலியாவின் துலிப் மலர்களும் அலங் காரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இப்படி உலகெங்கும் பூக்கும் மலர்களும், வாசனாதித் திரவியங்களும் ஸ்ரீநிவாஸனின் திருவடியை வந்தடைகின்றன.

# தென்னிந்தியாவின் 24 சக்தி பீடங்கள்



சிவபக்தனான தட்சன் அன்னை உமையம்மை தனது மகளாகப் பிறக்குமாறு இறைவனான சிவபெருமானிடம் வேண்ட இறைவனும் அவ்வாறே அருள் புரிந்தார். உமையம்மையும் தாட்சாயணி என்ற நாமத்துடன் தட்சனின் மகளாக பிறந்தார்.

சிவபக்தியில் சிறந்த பெண்ணாக திகழ்ந்த தாட்சாயணியை சிவபிரானுக்கு மணம் முடித்தவுடன் தட்சன் உலகை ஆளும் ஈசனின் மாமன் என்ற ஆணவம் கொண்டு செருக்குற்று இருந்தான்.

ஆணவம் தலைக்கேறிய தட்சன் சிவபரம் பொருளை அழையாது யாகம் ஒன்றினை நடத்தினான். யாகத்திற்கு சிவபிரானை அழைக்காதது ஏன் என்று கேட்க சென்ற தாட்சாயணியையும், சிவபிரானையும் அவமதித்தான்.

இதனால் கோபமுற்ற அன்னை தாட்சாயணி தட்சனால் பெற்ற இவ்வுடல் தனக்கு வேண்டாம் என்று கருதி தன்னை மாய்த்துக் கொண்டாள்.

இதனை அறிந்த சிவபிரான் சினமுற்று தாட்சாயணி உடலைக் கொண்டு ஊழித்தாண்டவம் ஆடினார். அப்போது தாட்சாயணியின் உடலின் பாகங்கள் சிதறி பூமியில் விழுந்தன.

அவ்வாறு உடல் பாகங்கள் விழுந்த இடங்களில் கோவில்கள் எழுப்பப்பட்டு அவை சக்தி பீடங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அந்த வகையில் தென்னிந்தியாவில் 24 சக்தி பீடங்கள் உருவானது. அவற்றைப் பார்ப்போம்.

## காமகோடி பீடம்

காமாட்சி அம்மன் இவ்விடம் தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தில் அமைந்துள்ளது. இங்கு அம்மை காமாட்சியம்மன் என்ற பெயரில் அருள்பாலிக்கிறாள். இங்கு அம்மை மூன்று தேவியரின் அம்சமாக இருக்கிறாள்.

## மந்த்ரிணீ பீடம்

மீனாட்சி அம்மன் இவ்விடம் தமிழ்நாட்டில் மதுரையில் அமைந்துள்ளது. இங்கு அன்னை மீனாட்சி என்ற பெயரில் அருள்புரிகிறாள். இவ்விடத்தில் அன்னை கல்வி மற்றும் கலைகளின் அதிபதியான ராஜமாதங்கியின் வடிவமாக திகழ்கிறாள்.

## சேது பீடம்

பர்வதவர்த்தினி இவ்விடம் தமிழ்நாட்டில் ராமேஸ்வரத்தில் அமைந்துள்ளது. இங்கு அம்மை பர்வதவர்த்தினி என்ற திருநாமத்துடன் அருள்புரிகிறாள். இவ்வம்மையை வழிபட திருமணத் தடை நீக்கி நல்ல திருமண வாழ்வு அமையும்.

## வீரசக்தி பீடம்

உலகநாயகி இப்பீடம் தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவிபட்டிணம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இங்கு அன் னை உலகநாயகி என்ற திருப்பெயருடன் மகிஷாசுரமர்த்தினியாக வீற்றிருக்கிறாள்.

## ஞானபீடம்

அகிலாண்டேஸ்வரி இப்பீடம் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி அருகில் திருவானைக் காவல் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இங்கு அன்னைஅகிலம் போற்றும் அகிலாண்டேஸ்வரி என்ற பெயரில் அருள்பாலிக்கிறாள். இவ்வன்னை ஸ்ரீசக்கரத்தை காதணியாக அணிந் திருக்கிறாள். இங்குள்ள சிவபெருமானை அர்ச்சகர்கள் உச்சிகாலை வழிபாட்டின்போது அன்னையின் அம்சமாக தங்களைக் கருதி சேலை கட்டி வழிபாடு நடத்துகின்றனர்.

## அருணை பீடம்

அபிதாகுஜாம்பிகை இப்பீடம் தமிழ்நாட்டில் திருவண்ணாமலையில் அழைந்துள்ளது. இங்கு இறைவி அபிதாகுஜாம்பிகை என்ற நாமத்தில் அருளுகிறாள். இவளே சிவபெருமானின் இடப்பாகத்தில் இடம் பெற்றவள் ஆவாள். இத்திருத் தலத்தில் கார்த்திகைதீப வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது.

## கமலை பீடம்

கமலாம்பிகை இவ்விடம் தமிழ்நாட்டில் திருவாரூரில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் அம்மை சந்திரனை தலையில் சூடி கமலாம்பிகை என்ற திருபெயரில் அருளுகிறாள். இங்கு அம்பிகை நான்கு கரங்களுடன் யோகாசனத்தில் அருளுகிறாள். இவ்விடத்தில் அன்னையின் தோழி நீலோத்பலாம்பாள் என்று அழைக்கப்படுகிறாள்.

## குமரி பீடம்

குமரி அம்மன் இவ்விடம் தமிழ்நாட்டில் கன்னியாகுமரியில் அமைந்துள்ளது. அம்பாள் கன்னி பகவதியாக முக்கூடல் சங்கமத்தில் அருளும் தலம் இது. இவ்வன்னை பிரகாசமான மூக்குத்தி அணிந்து சிறப்பு பெறுகிறாள்.

## விஷ்ணுசக்தி பீடம்

இவ்விடம் தமிழ்நாட்டில் கும்பகோணத்தில் அமைந்துள்ளது. 72000 கோடி மந்திர சக்திகளுக்கு அதிபதியான இவ்வம்மை மங்களாம்பிகை என்று அழைக்கப்படுகிறாள். ஆவணி ஞாயிறு அன்று மஞ்சள் பூசிய முகத்துடன் செம்பருத்தி அலங்காரத்தில் காட்சி தரும் இவ்வன்னையைக் காண கண்கள் கோடி வேண்டும்.


ஆன்மிகமலர் மெயில் புக்

## கால பீடம்

இவ்விடம் தமிழ்நாட்டில் திருக்கடையூரில் அமைந்துள்ளது. இங்கு அம்மை அபிராமி என்ற திருநாமத்துடன் அருள்புரிகிறாள். அன்னை தன் பக்தனுக்காக தை அமாவாசை அன்று பூரண முழுநிலாவாகக் காட்சி அருளி அதன் காரணமாக அபிராமி அந்தாதி பாடப்பட்ட தலம். இங்கு மாங்கல்ய காணிக்கை சிறப்பு.

## காளிசக்தி பீடம்

மகாகாளி இவ்விடம் தமிழ்நாட்டில் திருவள்ளுர் அருகில் திருஆலங்காட்டில் உள்ளது. இவ்விடத்தில் அன்னை இறைவனுடன் நடனப் போட்டி ஆடிய மகாகாளித் தலம். ரத்த பீஜனை போரிட்டு அழித்த தலம் இது. இங்கு வண்டார்குழலி அம்மை, காரைகால் அம்மை ஆகியோர் சிறப்பு பெறுகின்றனர்.

## தரணி பீடம்

இவ்விடம் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் அமைந்துள்ளது. இங்கு அம்மை குழல்வாய்மொழி, பராசக்தி என்ற திருநாமங்களுடன் அருளுகிறாள். இவ்விடத்தில் உள்ள அருவிகள் காரணமாக இது புண்ணிய தீர்த்த தலமாகக் கருதப்படுகிறது. இங்கு பவுர்ணமி இரவு நவசக்தி பூஜை நடைபெறுகிறது.

## சாயா பீடம்

லலிதா இவ்விடம் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து முசிறி செல்லும் வழி யில் ஈங்கோய்மலை என்ற இடத்தில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் அம்மை மரகதாம்பிகை, லலிதா என்ற திருநாமத்துடன் அருளுகிறாள். இறைவனான சிவபிரான் உமையம்மைக்கு தனது இடது பாகத்தை தருவதாக உறுதியளித்த தலம் இது.

## வீமலை பீடம்

இவ்விடம் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசத்தில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் அன்னை உலகாம்பிகை என்ற பெயரில் அருளுகிறாள். இசை வல்லுநர்கள்இவ்வன்னையை வழிபட அவர்களின் இசைத்திறன் மேம்படும். இவ்வன்னையே அகத்தியருக்கு திருமணக்காட்சி அருள காரணமானவள். இவ்விடம் நவகைலாய தலங் களுள் ஒன்று.

## காந்திசக்தி பீடம்

இப்பீடம் தமிழ்நாட்டில் திருநெல்வேலியில் அமைந்துள்ளது. இங்கு இறைவி காந்திமதி என்ற பெயரில் அருளுகிறாள். இவ்வம்மை மாலையில் ஞானசரஸ்வதியாகக் காட்சி யளிக்கிறாள். இவ்விடத்தில் அம்மையே இறைவனுக்கு நைவேத்தியம் படைப்பதாகக் கருதப்படுகிறது.

## பிரணவ பீடம்

இவ்விடம் தமிழ்நாட்டில் சீர்காழி அருகில் திருவெண்காட்டில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் அன்னை பிரம்மவித்யாம்பிகை என்று அழைக்கப்படுகிறாள். இவ்வன்னையை வழிபட குழந்தைப்பேறு, திருமணப்பாக்கியம், கல்வி மேன்மை, நாவன்மை ஆகியவற்றைப் பெறலாம். நரம்பு நோயையும் இவ்வன்னை தீர்ப்பாள். நவக்கிரகங்களில் புதனுக்குரிய தலமாக இவ்விடம் விளங்குகிறது.

## தரும பீடம்

இவ்விடம் தமிழ்நாட்டில் திருவையாற்றில் உள்ளது. இங்கு அன்னை தர்மசம்வர்த்தினி என்ற பெயரில் அருளுகிறாள். இவ்வன்னையே உலகிற்கு படியளக்கும் நாயகி ஆவாள். இவ்விடத்தில் அஷ்டமி திதியில் இரவு வேளையில் இவ்வன்னைக்கு திருக்கல்யாணம் நடைபெறுகிறது.

## இஷீசக்தி பீடம்

இவ்விடம் தமிழ்நாட்டில் சென்னை திருவொற்றியூரில் உள்ளது. இங்கு அன்னை வடிவாம்பிகை என்ற பெயரில் அருளுகிறாள். இவ்வன்னை ஞானசக்தியின் வடிவம் ஆவாள். இங்கு தினமும் சுயம்வர புஷ்பாஞ்சல் நடைபெறுகிறது.

## அர்த்தநாரி பீடம்

இவ்விடம் கர்நாடக மாநிலத்தில் கொல்லூரில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் அன்னை மூகாம்பிகை என்ற பெயரில் அருளுகிறாள். இவ்வன்னைக்கு அபிஷேகம் கிடையாது. இவள் சரஸ்வதியின் அம்சமாவாள். ஆதிசங்கரர் இவ்வன்னையின் மீது கலாரோஹணம் பாடினார்.

## கர்ண பீடம்

இவ்விடம் கர்நாடக மாநிலத்தில் கோகர்ணத்தில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் அம்மை தாமிர கவுரி என்ற நாமத்தில் சிவனை திருமணம் செய்த தலம். இவள் நதி வடிவ அம்பிகை ஆவாள். இங்கு சிறப்புமிக்க கோடிதீர்த்தம் உள்ளது.

## சைல பீடம்

இவ்விடம் ஆந்திர மாநில ஸ்ரீசைலத்தில் உள்ளது. இங்க அன்னை பிரம்மராம்பாள் என்ற பெயரில் அருளுகிறாள். இவ்வன்னையே பவானி வடிவில் மராட்டிய மன்னன் சிவாஜிக்கு வாள் அளித்தவள் ஆவாள். இவ்விடம் பூலோக கைலாயம் என்றழைக்கப்படுகிறது. சிவானந்த லஹரி பிறந்த தலம் இது.

## ஞான பீடம்

இவ்விடம் ஆந்திர மாநிலம் காளஹஸ்தியில் உள்ளது. அன்னை இவ்விடத்தில் ஞானப் பூங்கோதை என்ற பெயரில் அருளுகிறாள். இவ்வன்னை கல்வி மற்றும் அறிவை வழங்கும் தெய்வமாக வழிபடப்படுகிறாள். கண்ணப்பர் வழிபட்ட தலம் இது. இங்கு சரஸ்வதி தீர்த்தம் அமைந்துள்ளது.

## மாணிக்க பீடம்

இவ்விடம் ஆந்திர மாநிலம் கோதாவரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. காளிதாசர் சியாமளா தண்டகத்தில் குறிப்பிடும் மாணிக்க வீணா என்ற ஸ்லோகத்தின் அதிபதியான மாணிக்காம்பாள் அருளும் தலம் இது.

## மகாசக்தி பீடம்

இவ்விடம் கேரள மாநிலத்தில் கொடுங்கலூரில் அமைந்துள்ளது. இது சிலப்பதிகார காலத்தில் கட்டப்பட்ட பகவதி கோவில். இவ்விடத்தில் அன்னையின் திருவுருவம் பலாமரத்தினால் ஆனது. இங்கு கண்ணகியே பகவதியாக அருளுகிறாள். இவ்வன்னையை வழிபட குழந்தை பாக்கியம் ஏற்படும்.



## தியாகம் செய்யும் குணம் கொண்ட

# காஞ்சி அத்தி வரதர்

அத்தி வரதர் என்பவர் மற்ற தெய்வங்கள் போல் இல்லை. ஏனெனில் பொதுவாக பகவான் விக்ரஹ ரூபத்தில் கோவில்களில் எழுந்தருளி காட்சி தருகிறார். அத்தகைய பகவான் யாரிடமும் அவ்வளவு சுலபமாகப் பேசியது கிடையாது.

இதில் காஞ்சி அத்தி வரதர் ஓர் உதாரண மாகத் திகழ்பவர். அவரிடம் பக்தியுடன் கைங்கர்யம் செய்து வந்த திருக்கச்சி நம்பிகள் கேட்கும் அனைத்து வரங்களையும் தந்து, அவருடன் அத்தி வரதர் சகஜமாகப் பேசியுள்ளார்.

தம்மீது பக்தி இருந்தால் தம்முடைய அர்ச்சா நிலையை மீறி பேசுவேன் என பக்தனுக்கும் பகவானுக்கும் உள்ள பக்தியை காட்டினார் இந்த அத்தி வரதர்.

மேலும், அத்தி வரதருக்கு ஓர் உயர்ந்த குணம் உண்டு. நூற்று எட்டு திவ்ய தேசங்களில் கோவில் கொண்டுள்ள பகவானுக்கு ஒவ்வொரு குணம் உண்டு. அதில் அத்தி வரதர் கேட்டவுடன் கேட்கும் வரத்தை பக்தனுக்குக் கொடுக்கும் குணமும் மற்றும் தியாகம் செய்யும் குணமும் கொண்டவர். அதனால் காஞ்சி வரதர் கோவிலை, 'தியாக மண்டபம்' என்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.

இந்த அத்தி வரதர் தம்முடைய பக்தனுக்காகக் கேட்கும் வரத்தைக் கொடுக்க எதையும் தியாகம் செய்பவர். யாரிடமும் எதையும் எதிர் பாராமல் தியாகம் செய்யும் விசேஷமான குணம் இவருக்கு உண்டு.

ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் பெரியோர்கள் அனைவரும், "இந்த அத்தி வரதரின் பெருமையே இவரின் தியாகம் தான்" என்று சொல்வதுண்டு.

ஏனெனில் திருமங்கை ஆழ்வார் ஸ்ரீரங்கம் கோவிலில் மதில் சுவர் கட்டுவதற்கு அந்நாட்டு ராஜாவின் வரிப் பணத்தைச் செலவு செய்த காரணத்தால் சிறை வைக்கப்பட்டார்.

அப்போது காஞ்சி அத்தி வரதர் ராஜாவின் கனவில் சென்று, "எம் பக்தனின் வரி பணத்தை நானே செலுத்த வழி சொல்கிறேன்" என்று செல்வம் இருக்கும் இடத்தை மன்னனிடம் கூறி திருமங்கை ஆழ்வாரை விடுவித்தார். இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் திருமங்கை ஆழ்வார் மதில் சுவர் கட்டியது ஸ்ரீரங்கம் ரெங்கநாதனுக்கு. ஆனால், மன்னனின் கனவில் வந்து காப்பாற்றியது காஞ்சி அத்தி வரதர். இதுவே இவரின் தியாக குணம். தம்மை அழைக்காமல் போனாலும் பக்தனின் துன்பத்தை கண்டு மனம் பொறுக்காத தயாளன் அத்தி வரதர்.

மற்றொரு முறை பகவத் ஸ்ரீராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் இருந்த போது ஒரு நாள் ஒரு பெரிய பண்டிதர் ஸ்ரீராமானுஜரை வாதத்திற்கு அழைக்கிறார். பதினெட்டு நாட்கள் வாதம் நடைபெறுகிறது ஸ்ரீராமானுஜர் தோற்கும் நிலை உருவாகிறது.

அன்று இரவு ஸ்ரீராமானுஜர் வருத்தமுடன் உறங்கும் போது, கனவில் காஞ்சி அத்தி வரதர் தோன்றி ஒரு சில வேத வாங்கியங்களைச் சொல்லி, "இதை நாளைய தினம் வாதத்தில் சொல்லி நீ வெற்றியை காண்பாய்" என்று சொல்ல, மறுநாள் ஸ்ரீராமானுஜர் அந்த பண்டிதரை வாதத்தில் ஜெயிக்கிறார். ஸ்ரீராமானுஜர் இருந்து கைங்கர்யம் செய்தது ஸ்ரீரங்கம் ரெங்கநாதனுக்கு ஆனால் ஸ்ரீராமானுஜருக்கு துன்பம் வரும் போது ஓடி வந்து உதவி புரிந்தது காஞ்சி அத்தி வரதர்.

ஸ்ரீரங்கம் ரெங்கநாதனுக்கு நாயகியாக பக்தி செய்த ஸ்ரீநடன கோபால நாயகி சுவாமிகளும் காஞ்சி அத்தி வரதரின் பெருமையைப் பாசுரங்களில் பாடியுள்ளார்.

இப்படி அனைவரின் துன்பத்தைத் துடைத்த தயாளர், தியாகம் செய்யும் குணம் கொண்டவர், கேட்பவருக்கு கேட்ட வரம் கொடுக்கும் குணம் கொண்ட காருண்யம் கொண்டவர் காஞ்சி அத்தி வரதர்.

இப்பேர்ப்பட்ட தியாகம் செய்யும் குணமும் கேட்டவுடன் கேட்கும் வரத்தை அளிக்கும் குணம் கொண்ட காஞ்சி அத்தி வரதர் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு நமக்காக எழுந்தருளிக் காட்சி தருகிறார். "எம்முடைய அடியார்கள் கேட்கும் வரத்தை அளிக்கவே நான் உள்ளேன்" என்று திருமுகத்தைக் காட்டி சேவை சாதிக்கிறார். இந்த பவளவாய் தான் ஆலவட்டம் கைங்கர்யம் செய்த திருகச்சி நம்பிகளிடம் பேசியது.

இந்த உள்ளம் தான் திருமங்கை ஆழ்வார் சிறையில் துன்பத்தை கண்டு உதவி புரிந்தது.

இந்த காருண்யம் தான் ஸ்ரீராமானுஜர் வாதத்தில் ஜெயிக்க உதவி புரிந்தது. இத்தனையும் செய்த காஞ்சி அத்தி வரதர் நம்மையும் துன்பத்தில் இருந்து காப்பாற்ற வந்துள்ளார்.

அனைவரின் துன்பத்தைத் துடைத்து கேட்கும் வரத்தை அளித்து தியாகேசனாக இருக்கும் பகவான் அத்தி வரதர் நம்மைக் காப்பாற்ற அவர் அனைத்தையும் தியாகம் செய்வார்.

அவரை நாம் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றுள்ளோம். நமக்காக தியாகம் செய்யும் அத்தி வரதர் பார்க்கும் போது நாமும் சிலவற்றை தியாகம் செய்ய வேண்டும். காமம், குரோதம், பேராசை ஆகியவற்றை தியாகம் செய்து பக்தியை மட்டுமே கேட்டு அவர் திருவடியில் பக்தி வேண்டி இறுதியில் பிறவி இல்லா நிலையை அடைய அத்தி வரதரின் திருவடியில் சரணாகதி செய்ய வேண்டும்.



# சிவனுடன் ஐக்கியமான கருவூரார் சித்தர்

## கரூர் ஆனிலையப்பர் திருக்கோயில் சிறப்பு







கடும் தவத்தினால் கரூர் சித்தருக்கு எட்டு வகை சித்திகள் கிடைத்தன. சித்திகள் பெற்ற கரூர் சித்தர் சிவ தல யாத்திரை மேற் கொள்கிறார். ஈசனை அழைத்த உடன் அவர் காட்சி கொடுக்க வேண்டும் என்ற சித்தியும் பெற்றார். நெல்லை வந்த கரூர் சித்தர் நெல்லையப்பரை அழைத்தார். கரூர் சித்தருக்கு நெல்லையப்பர் பதில் அளிக்கவில்லை. இதனால் கோபமுற்ற கரூர் சித்தர் "ஈசன் இங்கு இல்லை. எருக்கும், குறுக்கும் இங்கு எழுக" என்று சாபமிட்டு மானூர் நோக்கி நடந்தார். சுவாமி நெல்லையப்பர் சிவதொண்டராக வந்து கரூர் சித்தரை அழைத்தார். சற்று கோபம் தணிந்த சித்தர், மானூர் வந்து காட்சி தந்து சாபவிமோசனம் பெறலாம் என ஈசனிடம் கூறி நடந்தார். இதையடுத்து நெல்லையப்பரும், காந்திமதி அம்பாளும் மானூர் சென்று கரூர் சித்தருக்கு ஜோதிமயமாக காட்சி அளித்தனர். தொடர்ந்து கரூர் சித்தரை உடன் நெல்லைக்கு அழைத்து வந்தார்கள். நெல்லை வந்ததும், இங்கு ஈசன் உள்ளார். எருக்கும், குறுக்கும் அறுக என கூறி சுவாமிக்கு சாப விமோசனம் வழங்கினார்...

சிவனுக்கே சாபவிமோசனம் தந்த சித்தர் கரூரில் உள்ள சிவஸ்தலத்தில் சிவனுடன் ஐக்கியமாகியுள்ளார்.

கரூர் பேருந்து நிலையம் அருகே நடந்து செல்லும் தொலைவில் உள்ளது அருமையான, பழமையான, பெரிய சிவாலயம், இங்கே பசுபதீஸ்வர் பசுபதிநாதர், (பசுபதி, ஆனிலையப்பர்) என்னும் திருநாமத்தில் சிவபெருமான் எழுந்தருளுகிறார். ஆனிலையப்பரை வழிபட்டால் மனத்துயரம் நீங்கும்.



மேலும் திருமண வரம், குழந்தை வரம் வேண்டுவோர் இங்கு வந்து வழிபடலாம். இத்தல சிவனுக்கு கல்யாண பசுபதீஸ்வரர் என்ற பெயரும் உள்ளது. இத்தலத்தில் பல்வேறு காலங்களில் பல்வேறு வகையான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது.

அந்த வகையில், பதினெட்டு சித்தர்களில் ஒருவரான கருவூரார் இங்கு வாழ்ந்து பேறு அடைந்த கோயிலாகவும் இத்தலம் திகழ்கிறது. கரூவூரர் ஆனிலையப்பரோடு ஐக்கியமானதால் கருவறையில் உள்ள சுயம்பு லிங்கம் (படம்) சற்றே சாய்ந்தவாறு உள்ளது.

கருவூரார் இத்தலத்துள் தென் மேற்கு மூலையில் கோயில் கொண்டுள்ளார். பற்றற்றவராக வாழ்ந்திருந்த இவர் மீது, ஒருசிலர் வாம மார்க்கத்தைக் கடைப் பிடித்து மது, புலால் இவைகளால் பூஜை




ஆன்மிகமலர் மெயில் புக்



செய்வதாக மன்னரிடம் குறை கூற, மன்னன் இவரிடம் எக்குறையும் காணாது, குறை கூறியவர்களைத் தண்டித்தான். மீண்டும் மீண்டும் அவர்கள் தொல்லை தரவே இவர் தைப்பூசத்தன்று ஆனிலையப்பருடன் ஐக்கியமானதாகக் கூறப்படுகிறது.

இங்குள்ள ஆனிலை எனும் லிங்க வடிவமானது முற்றிலும் சுயம்பு மூர்த்தியாகும். புற்றிடங் கொண்ட ஈசரை முதலில் வழிபடும் பெருமை பெற்றவராக பிரம்மதேவர் குறிப்பிடுகிறார். காமதேனுவால் வழிபடப்பட்ட சிவாலயம் இது. காமதேனு வழிபடும்போது குளம்பு சிவலிங்கத்தின் மீது பட்டதால் ஏற்பட்ட குழிவான தழும்பு வடிவம் உள்ளது.

இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள் பாலிக்கிறார், சிறிது சாய்வாக உள்ளது. ஆவுடையார் சதுரமாக உள்ளது. மாசி மாதத்தில் ஐந்து நாட்கள் சுவாமி மீது சூரிய ஒளி படுகிறது.

சித்தர் பீடத்தின் அமைப்பே மனதை லகிக்க செய்கிறது. பீடத்தின் முன்று பீடத்திலும் காகபுசுண்டர், அகத்தியர், பதஞ்சாலி முனிவர் என அமைப்பு அழகாய் உள்ளது.

சித்தர் வழிபாட்டில் மெய்பொருளை நாடும் அன்பர்கள் ஒருமுறை சென்று வாருங்கள். சித்தர் பீடத்தில் தவம் செய்ய தெய்வீக உணர்வுகளை பெறலாம். வழிகாட்ட வல்ல குருவாக அருள் செய்கிறார். உத்திரம் 2 பாதம், சித்திரை 2 பாதம், அஸ்தம் ஆகிய நட்சத்திரக்காரர்கள் செல்ல வேண்டிய ஸ்தலம்.

சோழர்களின் காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தவர் கருவூர் சித்தர்! அட்டவீரட்டானங்களில் ஒன்றான திருக்கோவிலூர் வீரட்டேஸ்வரருக்கு ராஜராஜசோழனின் அப்பா தங்கத்தால் பசு ஒன்றை தானமாக வழங்கினார் என்று வரலாறு தெரிவிக்கிறது; அதன் பலனாக, உலகம் முழுவதையும் ஆட்சி செய்வதற்காகவே பிறந்தவர் ராஜராஜசோழன்! சித்தர் கருவூராரின் ஆசியும், வழிகாட்டுதலுமே இதற்குக்காரணம்!



# உணவு விதிமுறைகள்

❖ பசிக்கும் போது தான் சாப்பிட வேண்டும்.

❖ அளவிற்து அதிகமாக உண்டால் நோய்வரும் . ஆயுள் குறையும். எனவே வயிறு புடைக்க மூச்சு முட்ட உண்ணக் கூடாது.

❖ மிளகு சேர்ப்பதால் உணவில் உள்ள விஷம் நீங்குகிறது. உடலில் உள்ள விஷமும் முறிகிறது.

❖ வெந்தயம் உஷ்ணத்தைக் குறைக்கிறது. வெந்தயத்தை இரவே தண்ணீரில் ஊற வைத்து காலை எழுந்தவுடன் தண்ணீருடன் பருகி வந்தால் உடம்பில் உள்ள உஷ்ணத்தை குறைக்கிறது.



❖ உணவில் சீரகம் (சீர் அகம்) சேர்ப்பதால் உடம்பை சீராக வைப்பது மட்டும் அல்லாமல் குளிர்ச்சியை தருகிறது.

❖ கடுகு உடலில் உள்ள உஷ்ணத்தை ஒரே அளவாக வைக்கிறது.

❖ இஞ்சியை உணவில் சேர்ப்பதால் பித்தம் தலை சுற்றல் வாந்தி போன்ற கோளாறுகள் வருவதில்லை.

❖ உணவு உண்பதற்கு முன்பு கை கால் வாய் போன்றவற்றை நீரால் கழுவ வேண்டும்.

❖ காலில் ஈரம் உலர்வதற்கு முன்பே உணவு உண்ணத் தொடங்க வேண்டும்.

❖ உணவு உண்ணும் போது பேசக் கூடாது. படிக்கக் கூடாது. இடதுகையை கீழே ஊன்றக் கூடாது

❖ வீட்டில் கதவை திறந்து வைத்துக் கொண்டு வாசலுக்கு எதிரே அமர்ந்து உண்ணக் கூடாது.

❖ காலணி அணிந்துக் கொண்டு உண்ணக் கூடாது.

❖ சூரிய உதயத்திலும் மறையும் பொழுதும் உண்ணக் கூடாது.

GET IT ON
Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர் .காம்
www.aanmeegamalar.com


ஆன்மிகமலர் மெயில் புக்

# விரும்பியபொழுது பழக்கங்களை ஆக்குதலும் அழித்தலும்



62 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “தனது குழந்தைகளுக்காக இறைவன் செய்யும் உபகாரங்கள் அநேகம். சில சமயங்களில்ஒரு வேண்டுகோளை அவன் உடனேயேநிறைவேற்றுகிறான். இன்றைய பிரார்த்தனை கூட்டத்திற்காக மழை நிறுத்த முடியுமா என நான் கேட்டபோது,” “ஒரு சிறிதளவு சூரிய ஒளி இருக்கும்,” என தெய்வீக அன்னையின் குரல் கூறியது. தெய்வீகமான மெய்பொருளின் கருணையினாலேயே இன்று காலை சூரிய ஒளியை நாம் பெற்றிருக்கின்றோம்.” இது சான்டியாகோ, கலிஃபோர்னியா, டிசம்பர் 12, 1943 ல் நிகழ்ந்ததாகும்.

“ஆண்டவன்தான் அனைத்து அன்னையர்களின் அன்னையும், அனைத்து தந்தையர்களின் தந்தையும், அனைத்து நண்பர்களின் பின்னணியிலுள்ள ஒரே நண்பனுமாவான். அவனை நீங்கள் எப்பொழுதும் நெருங்கியவருள் மிகவும் நெருங்கியவராகக் கருதினால் உங்களுடைய வாழ்வில் அநேக அற்புதங்களைக் காண்பீர்கள். “அவன் என்னுடன் நடக்கிறான். அவன் என்னுடன் பேசுகிறான்: நான் அவனுக்கே சொந்தமானவன் என அவன் கூறுகின்றான். “நிதானமான அடியுடன்” தெய்வீகப் பிரதேசத்தினுள்தியானத்தின் மூலம் நீங்கள் திட்டவட்ட மான உட்பாதைகள் அமைப்பீர்களானால், இறைவன் உங்களுடன் பேசுவான்.

“இறைவனை வெளியே துரத்திவிடும் வகையில் நீங்கள் வாழ்ந்தால், அன்பையே நீங்கள் உங்களிடமிருந்து துரத்தி விடுகிறீர்கள். நாம் தேடுகின்ற அனைத்திலும் பணம் மற்றும் புலனின்பங்கள் நாம் உண்மையாக இறைவனையே தேடுகின்றோம். நாம் வைரங்களை தேடுகின்றவர்கள் ஆனால் அதற்குப் பதிலாக சூரிய ஒளியில் பிரகாசிக்கும் சிறிய கண்ணாடித்துண்டுகளை எடுப்பவராகின்றோம்.

அவற்றின் கவர்ச்சியால் ஒரு கண நேரத்திற்கு குருடாக்கப்பட்டு, தேடுவதற்கு மிகவும் கடினமான உண்மையான வைரங்களைத் தொடர்ந்து தேட மறந்து விடுகின்றோம்.

கிடைப்பதற்கு மிகக்கடினமாக இருப்பினும் உண்மையான மற்றும் நிரந்தரமான மகிழ்ச்சியை உங்களுக்குத் தரவல்ல உங்க ளுடைய நல்ல பழக்கங்களே வைரங்களாகும். அத்துடன் தீய பழக்கங்களாகிய வெறும் சிறிய கண்ணாடித்துண்டுகள் எளிதில் பெற முடிபவையாதலால் அவை உங்களுக்கும் திருப்தி அளிப்பதுபோல் தோன்றும். ஆனால் அவை ஏமாற்றும் தன்மை உடையவையானதால், இறுதியில் ஏமாற்றத்தைக் கொணர்கின்றன.

உங்களுக்குத் திகட்டுதல் ஏற்படுவதால் எதுவும் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பதில்லை, மானிட அனுபவங்களின் முடிவை என்னால் காணமுடியும். மேலும் உண்மையான மற்றும் நிரந்தரமான ஒரே ஆனந்தத்தை நான் இறைவனில் கண்டுள்ளேன்.”

“முதுமையின் உண்மையான விளக்கமாவது, ஒருவர் உலகத்துடன் சலிப்புற்று விட்டநிலை என்பதாகும். நான் வாழ்வின் இன்பங்களை மிகவும் சீக்கிரமாகவே சலிப்புற்று விட்டேன். (பரமஹம்ஸரின் பதினோராவது வயதில் அவருடைய அன்னையின் மரணம் அவரது வாழ்வின் திசை திருப்பும் முனை யாக இருந்தது) அத்துடன் இறைவனின் ஆனந்தத்தை நான் தேடிக் கண்டிராதிருந்தால், இவ்வுலகு எனக்கு மிதமிஞ்சிய சலிப்பை அளிப்பதாய் இருந்திருக்கும்.

அவனில் நான் காணும் மகிழ்ச்சியும் அபரிமிதமும் அளவற்றவை. பக்தனுடைய இதயத்தில் இறைவன் நுழையும்போது ஏற்படும் ஆனந்தத்தை வர்ணிப்பதற்கு எனக்கு முடிவற்ற காலமும் போதாது. இது மிகைப்படுத்திக் கூறுதல் இல்லை. ஏனெனில் இறைவனின் ஆனந்தம் என்றும் உள்ளது, முடிவற்றது, என்றும் புதியது, எல்லையற்றது. நாம் அனைவரும் அதனுடைய கணநேரக் காட்சிகளை நிரந்தர ஆனந்த நிலையைப் பற்றிய ஆன்ம நினைவூட்டல்களை

அவ்வப்பொழுது அனுபவித்துள்ளோம். இதை விளக்குவதற்கு உண்மையான அன்பைப்பற்றிய நிஜக்கதை ஒன்றை நான் உங்களுக்குக் கூறுகிறேன்.”

குருதேவர் கூறுகிறார்: தனது மனைவியிடம் ஆழமான அன்பு செலுத்திய விசுவாசமானஒரு கணவர் இந்தியாவில் இருந்தார். வேறொரு ஆண்மகன் அவளிடம் மோகம் கொண்டான். அவள் தன் காதலனுடன் ஒடிப்போய்விட்டாள். இறுதியில் அவளைப் பார்த்துக் கொள்பவர்களோ அல்லது பணமோ இல்லாத நிலையில் கைவிட்டுவிட்டபின் ஒரு நாள் அவளுடைய கணவர் அவளைப் பார்ப்பதற்குச் சென்றார்.

அவர் மௌனமாகப் பேசினார்.

"அந்த அனுபவத்தை நீ முற்றிலுமாக மறந்து விட்டாயா? அப்படியென்றால் நீ என் னுடன் வீட்டிற்கு வா."

அவள் தயங்கினாள், "உங்களை மேலும் அவமானப்படுத்த என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை." "சமூகத்தின் அபிப்பிராயத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை," என அவர் பதி லளித்தார். "நான் உன்னை நேசிக்கிறேன். நான் உண்மையான உன்னை உனது ஆன்மாவை நேசிக்கிறேன். நடந்தது எதுவும் எந்த வித்தியாசத் தையும் ஏற்படுத்தவில்லை."

"அது உண்மையான அன்பாகும். அந்தக் கணவர் தனது மான மரியாதைப்பற்றி அக்கறைப்படவேயில்லை; அவர் தனது அன்பிற் குரியவருடைய நலத்தைப் பற்றி மட்டுமே சிந்தித்தார். நமது உண்மையான அன்பைச் செலுத்துவதற்குப் பெரியதோர் தடைக்கல், நமது பழக்கங்களாகும். நமது ஆன்மாவும் நமது அறிவும் இசைவுடன் இருப்பினும் நமது நல்ல பழக்கங்கள் பலவீனமாக உள்ளது. கீதை கூறுகின்றது: "நெறி நிற்கும் (முக்திக்காக) நல்லறிஞனுடைய மனதையும் கொந்தளிப்புள்ள இந்திரியங்கள் பலவந்தமாகப் பற்றியிழுக்கின்றன. (பகவத் கீதை 2. ஸ்லோகம் 60)

"அனேக மக்கள் பழக்கத்தின் பயங்கரத் தன்மையைப் புரிந்து கொள்வதில்லை, சிலர் பழக்கங்களை எனக்கு விரைவில் ஏற்படுத்திக் கொள்கின்றனர். நல்ல பழக்கங்களை நிலை நாட்டும்பொழுது இது மிகவும் சரியே; ஆனால் தீய பழக்கங்களை ஏற்படுத்தக்கூடிய செயல்களைச் செய்யும்பொழுது அது அபாயகரமானது.

இவ்வுலகில் அநேக மக்களுக்கு உதவி தேவைப்படுகின்றது! இறைவன் அவனுடைய அன்பின் மனமுவந்த கருவிகளாக இருப்போர் மூலமாக அவர்களுக்கு உதவியை நிச்சயமாகச் செய்கிறார். அன்றொரு நான் பரிதாபத்திற்குரிய ஒருவர் என்னிடம் வந்தார். இந்த நபர் குடி போதையில் இல்லாதபோது ஒரு நல்ல மனிதர். ஆனால் குடிக்க ஆரம்பித்தவுடன் அவர் ஒரு சாத்தானைப்போல் ஆகிவிடுகிறார்.

குடிபோதையில் இல்லாத சமயங்களில் நல்லதைச் செய்வதற்கு எந்த உச்சங்களுக்கும் செல்வார். ஆனால் குடித்திருக்கும்போது தனது மனைவியை அடித்து பெரும் பயங்கரத்தை ஏற்படுத்துவார். அவர் குணமடைவதற்காக என்னிடம் வந்திருந்தார். அவர் ஒரு சிறிதளவி லாவது என்னிடம் இசைவாரானால், அவர் உதவி பெறுவார் என்பதை நான் அறிவேன். ஆனால் தீய பழக்கங்கள் எவ்வளவு பயங்கர மானவை என்பதைப் பாருங்கள்! குடியின் தாக்கத்தில் இல்லாதபோது, தீமையின் ஓர் அடையாளத்தைக்கூட அவரிடத்தில் நீங்கள் காணமுடியாது.

அத்தகைய நேரங்களில், தன்னையே அழித்துக்கொள்ளவேண்டும் என்று நினைக்கும் அளவிற்கு தனது தீய பழக்கத்தைப்பற்றி அவர் பச்சாதாபத்தால் நொந்து கொள்வார் இருந்தும் அவர் குடிக்கின்றார்! பழக்கம் இதைத்தான் செய்கிறது. தீயபழக்கங்களை ஏற்படுத்தக்கூடிய செயல்களைச் செய்யும்பொழுது அது அபாயகர மானது. இப்படிப்பட்ட ஒருவனுக்கு ஒரு சிகரெட்டை நீங்கள் கொடுத்தால், அவர் வழக்கமாக புகை பிடிப்பவராக மாறநேரலாம் அல்லது குடிபானத்தை ஒரு முறை ருசிப்பது அவரை ஒரு வாழ்நாள் முழுவதும் குடிகாரனாக ஆக்கிவிடமுடியும்."

"நல்லது ஏதாவதைச் செய்ய உங்கள் மனதில் தீர்மானித்தும் அதை நீங்கள் கட்டாயம் செய்ய வேண்டும். உங்கள் வழியில் குறுக்கே நிற்பதற்கு எதையும் அனுமதிக்காதீர்கள். ஆனால் நீங்கள் ஒரு தீர்மானம் செய்வதற்கு முன்பு அது நல்லதான ஒன்று என்பதை நிச்சயம் செய்துகொள்ளுங்கள். நீங்கள் திடமாகத் தீர்மானம் செய்து கொண்டு, பின் அத்தீர்மானத்தை உறுதியாகக் கடை பிடிக்கும்போது இறைவனின் ஒரு நியதி உங்க ளுக்காகச் செயல்படுகிறது."

"நாம் அனைவரும் நல்லதையே நினைக்கி றோம்; ஆனால் சில சமயங்களில் பழக்கங்கள் நமது விருப்பத்திற்கு எதிராக நம்மை, மற்ற வர்களுக்கும் நமக்கும் தீங்கிழைக்கும் விஷயங் களைச் செய்ய வைக்கின்றன. ஆகவே தீய பழக் கங்களால் அதிகாரம் செய்யப்படாமலிருக்க, உங் கள் மனதில் தீர்மானம் செய்து கொள்ளுங்கள்."

தீயபழக்கங்களுடைய ஒருவர் மேலே கூறியவாறு இருப்பார்களானால் தீய பழக்கம் இல்லாத, இறைவனை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடைய ஒருவர் எப்படியிருப்பார் என்ற எனது பணிவான கருத்தினை வாசகர்களுக்குத் தெரிவிக்க விழைகின்றேன்.

க்ஷேத்திரம், க்ஷேத்திரஜ்ஞன் என்று இரு சொரூபங்கள் உள்ளன. இதை பகவத்கீதை 13வது அத்தியாயம் விளக்குகிறது. 'க்ஷேத்திரம்' என்பது (ஆலயம்) உடலைக்குறிக்கிறது.'க்ஷேத்திரஜ்ஞன்' என்பது இந்த உடலுக்குள் குடிகொண்டிருக்கும் இறைவன் (ஆத்மா)வை குறிக்கிறது.

நாம் ஒரு கோயிலுக்குள் சென்றால் எவ் வளவு பயபக்தியுடனும் சுத்தமாகவும் செல் வோம். அங்கே இறைவன் குடியிருப்பதால் நாம் அவ்வாறு செல்கிறோம். அதே போன்று நம் உடலும் ஓர் ஆலயமே! ஆலயத்தை எவ்வாறு சுத்தமாக வைத்திருக்க வேண்டுமோ அதே போல் நம் உடலாகின்ற ஆலயத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

எந்தத் தீய பழக்கங்களும் இல்லாமலிருக்க வேண்டும். உடலை ஒரு கோவில் போன்றும் உடலுக்குள் உறைத்திருக்கும் ஆத்மாவை இறை வனாகவும் உணர்ந்தறிகின்ற, ஓர் உண்மையான மனிதன் தன் உடலையும் உள்ளத்தையும் தூய் மையாக வைத்து தன் வாழ்நாளை இறைவனுக்கு அர்ப்பணித்து வாழ்வான்.

தன்னுடைய ஆத்மாவை இறைவனின் அம்சமாகவும் ஆத்மா உறைந்திருப்பதற்காக இறைவனால் படைக்கப்பட்ட இந்த உடலை ஓர் ஆலயமாகவும் வாழ்நாளில் ஒரு காலகட்டத்தில் உணர்ந்தறிந்த பின்னர் தன்னுடைய வாழ்நாளில் தனக்காக இறைவனால் அளிக்கப்பட்டுள்ள கடமைகளை இறைவனுக்கு அர்ச்சனை செய் கின்ற மலராக நினைத்து அக்கடமைகளைச் செவ்வனே செய்து தனக்கும் பிறருக்கும் மேன்மை ஏற்படுத்திக்கொள்கிறான். அந்தக்கடமைகளில் ஒரு சிறுபிழைகூட இல்லாமல் செய்வான்., செய் கின்ற கடமைகளில் தவறி ஏதேனும் பிழை இருக்க நேர்ந்தால் அந்தப் பிழையை இறைவனே நேரடியாக திருத்தி விடுவார். அது நன்றாகவே செய்பவர்களுக்கு தெரியவரும்.

ஆனால் இறைவனை அறிவதற்காகவும் அவனை அடைவதற்காகவும் மட்டும்தான் இந்த சரீரத்தை இறைவன் நமக்கு தந்தருளியிருக் கிறான். அதற்கேற்றவாறு இறை நியதியைப் புரிந்துகொண்டு குறிக்கோளை அடைந்தவுடன் சரீரத்தை தூக்கி எறிந்துவிடவேண்டும்.

'க்ஷேத்திரம்' என்றால் இச்சை, (விருப்பம்), துவேஷம் (பகைமை), சுகம், துக்கம், சரீரம், பிராணசக்தி, தாரணசக்தி (தாங்கும் ஜீவசக்தி) இந்த ஏழு மாறுதல்களைக் கொண்டது க்ஷேத் திரம். க்ஷேத்தரம் என்னும் சரீரம் (இது) தன்னின் றும் வேறுபட்டது என்ற குறியீட்டைப் பெற இருபது சாதனங்களைப் பெற்றிருக்கிறது. அவையாவன: (அத் 13 ஸ்லோகம் 6)

1. தன்னுள் மேன்மை சார்ந்த கர்வம் இல்லாமை.
2. தன்னுள் செய்கைத் தன்மை இல்லாமை.
3. உடல், உள்ளம் வாக்கு எதனாலும் எவருக்கும் துன்பம் தராதிருத்தல்.
4. மன்னிக்கும் தன்மை.
5. உடல் மனம் வாக்குகளில் எளிமை.
6. ஞானம் பெற குருவிடம் சென்று அவருக்குத் தொண்டு புரிவது.
7. உடலையும் உள்ளத்தையும் தூய்மையுடன் வைத்துக்கொள்வது.
8. தன் லட்சியத்திலிருந்து பிறழாமல் திடமாகச் செயலாற்றுதல்.
9. மனதைக் கட்டுப்படுத்திவைத்தல்,
10. புலன்களின் இலக்குகளான விஷயங்களுடன் ஒட்டுறவு கொள்ளாமல் வைராக்கியத்துடன் இருத்தல்.
11. 'நான்' 'எனது' எனும் செருக்கின்றி இருத்தல்.
12. வைராக்கியஉணர்வுபெற,பிறப்பு,இறப்பு,முதுமை வியாதிகள் இவைகளில்கேடுகாணுதல்.
13. எதிலும் பற்றுதலும் விருப்பமும் இல்லா திருத்தல்.
14. மனைவி மக்கள் வீடு, முதலியவைகளில் அதிக பற்றில்லாதிருத்தல்.
15. அனுகூலம், பிரதிகூலம் ஆகிய முரண்பட்ட விளைவுகள் ஏற்படும்போது சித்தத்தை சம நிலையில் வைத்திருப்பது.
16. என்னிடம் சஞ்சலமில்லாத தூய பக்தி கொண்டிருத்தல், கூடவே உலகியல் வாழ்வில் பற்றற்று வாழ்தல்.
17. ஏகாந்தமான (தனிமை) இடத்தில் வசிக்கும் வழக்கத்தை மேற்கொள்ளல்.
18. மக்கள் கூட்டத்தில் கலந்து உறவாடும் விருப்பமோ, ஆர்வமோ இல்லாதிருத்தல்.
19. பரமாத்மாவின் நிலைபாட்டை தினமும் இடைவிடாமல் சிந்தித்தல்.
20. எல்லா இடங்களிலும் எல்லா ஜீவராசிகளிடமும் பரமாத்மாவையே பார்க்கவும் உணரவும் செய்தல்.

இந்த இருபது சாதனங்கள் (கருவிகள்) மூலம் சரீரம் தனித்தன்மையுடன் தெரியவரும். சரீரத்தை 'இது' எனும் உருவில் (தன்னிலும் வேறுபட்டதாக) காண்பதுதான் ஞானம். இதற்கு மாறாக சரீரத்தைத் தன் சொரூபமாகப் பார்ப்பது அஞ்ஞானம்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# ஆசிரியர்கள் வெட்டவெளியில் ஒளிருகின்ற சந்திர சூரியர்கள்

❖ 'ஒரு பயனுள்ள மனிதன்'. இந்த சொற்றொடருக்கு அர்த்தமே இல்லை. மனிதனே பயனுள்ளவன் தான். 'ஒரு பயனுள்ள பெண்' இச்சொற்றொடருக்கு அதிகப்பொருள் இருக்கிறது. ஏனென்றால் உயிரின் பரிணாமவளர்ச்சி பெண்ணினின் வழியாகவே நிகழுகிறது.

❖ இந்தியாவில் மேற்சொன்ன உபதேசம் ஆண்களின் சமுதாயத்திலும் பெண்களின் சமுதாயத்திலும் இது பலவீனமாகவே இருக்கிறது. இந்தச் சிறிய கருத்து சிந்தனை செய்கின்ற ஒவ்வொரு மனிதனாலும் சரியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

❖ சமுதாயக் குற்றங்கள் நமது நாட்டில் மிக அதிகமாக இருக்கின்றன. அது முதலில் களைந்தெடுக்கப்பட வேண்டும். பிறகு வரதட்சிணை முறை ஜாதீய அடிப்படையில் பரம்பரையைப் பேசுதல், சமுதாயத்தால் நிகழ்த்தப்படுகின்ற ஆடம்பரத் திருமணங்கள். மேலும், சிறிதும் கருணையே இல்லாத பண கை மாற்றங்கள் எல்லாக் கோணங்களிலும் இருந்து எடுத்து ஏறியப்பட வேண்டும். இத்தகைய இந்துக்களின் சமுதாயமுறை சமுதாயத்தின் மத்தியிலே ஒரு பெரிய பயத்தை ஏற்படுத்தி இருக்கிறது.



❖ அனைவருக்கும் திருப்தி தரக்கூடிய திருமணமுறை எது என்ற முடிவெடு. இந்த முடிவு ஒரு மணப்பெண்ணுக்கும் ஒரு ஆண் பிள்ளைக்கும் பொருந்தும். அவர்கள்தான் அதை செய்ய வேண்டும். அல்லாமல் வேறு வகையான பிரச்சாரத்தினாலும் சட்டத் திருத்தங்களாலும் இவைகளைக் கொண்டு வந்தால் இது சமுதாயத்தில் பெரிய தோல்வியைத் தழுவும்.

❖ அழகான மாமிசம், தோல் இவைகளால் மூடிய உடம்பை ஈர்ப்பது மட்டும் காதல் என்ற அன்பு அல்ல. மேற்சொன்னது இரண்டு உயிர்களுக்கு மத்தியிலே ஏற்படுகின்ற ஒரு சுத்தமான பரிவர்த் தனையும் எண்ணக்குவியல்களுமேயாம். இவைகளைக் கொட்டுகின்ற புத்தியைப் பார்.

❖ உலகிலுள்ள எல்லா பேராசிரியர்களுடன் சமய குருமார்களும் சமமானவர்களே என்பதை நீ சமமாக எண்ண வேண்டும். அவர்களே கல்வி என்ற மிகப்பெரிய வெட்டவெளியில் ஒளிருகின்ற சந்திர சூரியர்கள் ஆகும். ஒளி உள்ள சந்திர சூரியர்களை கவனிக்காமல் இருக்க முடியுமா? மதிக்க வேண்டியவைகளே அவைகள்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

# அற்புதமான ஆடி மாதம்

ஜோதிட சாஸ்திரத்தில் ஆடிமாதத்தை 'கர்கடக மாதம்' என்பார்கள். சூரியன் குருவின் நட்சத்திரமான புனர்பூசம் நான்காம் பாதத்தில் நுழையும் நேரத்தில் கடக ராசியில் சூரியன் செல்வதே ஆடி மாத பிரவேசம்.



அந்தந்த கால, பருவ சூழ்நிலைக்கு ஏற்ப திருவிழாக்களையும், உற்சவங்களையும், விரத வழிபாடுகளையும் ஏற்படுத்தி வைத்துள்ளனர்.

- ஆடி மாதத்தில் இருந்துதான் விரதங்கள், பண்டிகைகள், உற்சவங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக தொடங்குகிறது.
- இந்த மாதத்தை அம்மன் மாதம் என்றும் அம்பாள் மாதம் என்றும் சிறப்பித்து கூறுவார்கள்.
- வீடுகளிலும், கோயில்களிலும் விழாக்களும், விரத வழிபாடுகளும் களை கட்டி விடும்.
- அம்மன், அம்பாள், ஆண்டாள், சக்தி ஸ்தலங்களில் சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் என்று பக்தி மணம் கமழும்.
- ஆடி மாதத்தில் வரும் செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகள் மிக விசேஷமானவை.
- 'ஆடி செவ்வாய் தேடிக் குளி' என்பது பழமொழி. அதாவது விரதம் இருந்து எண்ணெய் தேய்த்து குளித்து அம்பாளை வழிபட பெண்களின் மாங்கல்ய பலம் கூடும் என்பது ஐதீகம்.
- ஆடி வெள்ளி வழிபாடு செய்வது சகல பாக்யங்களையும் அள்ளித் தரும். திருமண பாக்யம் கைகூடிவரும்.
- புதுமண தம்பதியருக்கும் நீண்ட காலமாக குழந்தைபாக்யம் எதிர்பார்த்திருப்போருக்கும் நல்ல அறிவாற்றல், புத்தி சாதுர்யத்துடன் கூடிய குழந்தை பாக்யம் உண்டாகும்.
- ஆடி ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனைகளையும் நேர்த்திக் கடன்களையும் செலுத்தும் நாளாக கருதப்படுகிறது.
- அலகு குத்தி காவடி எடுத்தல், பால்குடம் எடுத்தல், பொங்கல் வைத்து வழிபடுதல், சிறப்பு பூஜைகள் செய்தல், தீ மிதித்தல், கூழ் ஊற்றுதல், அம்மன் கோயில்களுக்கு சென்று வழிபடுதல் என்று இந்த மாதம் முழுவதும் பக்தி மார்க்கத்தில் மூழ்கித் திளைப்பார்கள்.
- ஆடி வெள்ளி, செவ்வாய், ஞாயிறு தவிர ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், ஆடிக்கிருத்திகை, ஆடித்தபசு ஆடி பவுர்ணமி, ஆடிப்பெருக்கு என்று பலப்பல விசேஷ நாட்கள் இந்த மாதத்தில் வருகின்றன.
- இதில் ஆடி அமாவாசை முக்கியமானது. அன்றைய தினம் கடல், நதிகள் உள்ளிட்ட புனித நீர்நிலைகளில் நீராடி, முன்னோர்க்கு திதி கொடுப்பது மிகவும் சிறப்பானதாக கருதப்படுகிறது.
- அவரவர் குடும்ப வழக்கப்படி வீட்டில் படையல் இட்டு வழிபட்டு முன்னோர் நினைவாக இல்லாதோர், இயலாதோர், முதியோர், ஆதரவற்றோர் இல்லங்களில் அன்னதானம், உடை, போர்வை போன்றவற்றை வழங்குவது பல்வேறு பாவங்களை நீக்கி புண்ணிய பலன்களை சேர்க்கும்.
- ஆடி மாதத்தின் 18வது நாள் 'ஆடிப்பெருக்கு' என்று கொண்டாடப்படுகிறது.
- இந்நாளில் பெண்கள் தாலிக்கயிறு மாற்றி புதுக்கயிறு அணிவார்கள்.
- திருநெல்வேலி அருகில் உள்ள சங்கரன் கோவிலில் ஆடி தபசு பிரசித்தி பெற்றது.
- கோமதி அம்மனின் தவத்துக்கு இரங்கிய சிவபெருமான், புன்னை வனத்தில் சங்கர நாராயணராக ஆடி பவுர்ணமியன்று காட்சியளித்தார்.
- ஆடிப்பூரம் ஆண்டாள் அவதாரம் செய்த திருநட்சத்திரம். கன்னிப் பெண்களும் திருமண பாக்யம் கைகூடாமல் இருக்கும் பெண்களும் இந்த நாளில் விரதம் இருந்து பக்தியுடன் ஆண்டாள் அருளிச் செய்த 'வாரணமாயிரம்' என்று தொடங்கும் பாசுரத்தை பாடி வர திருமண பிராப்தம் கூடிவரும்.
- இத்தனை சிறப்புகள் மிக்க ஆடி மாதத்தில் நல்ல காரியங்களை ஆரம்பிக்க கூடாது, செய்யக் கூடாது என்ற கருத்து நிலவுகிறதே. எதனால்?
- இந்த மாதத்தில் விரதங்கள், வழிபாடுகள், கோயில் திருவிழாக்கள் மாறிமாறி வந்துகொண்டே இருக்கும்.
- ஆன்மீகத்திலும் இறை வழிபாட்டிலும் மனப்பூர்வமாக ஈடுபட வேண்டியிருப்பதால் மற்ற காரியங்களில், விசேஷங்களில் கவனம் செலுத்துவது சிரமம்.
- இறைவனை துதிப்பதற்கும், அவன் சிந்தனையாகவே ஆன்மீக ஸ்தலங்களுக்கு சென்று தரிசனம் செய்வதற்கும் இடையூறாக மற்ற விழாக்கள், நிகழ்ச்சிகள் இருந்துவிட கூடாது என்பதற்காகவே மற்ற சுப விசேஷங்கள் இந்த மாதத்தில் தவிர்க்கப் படுகிறது.

– ச.நாகராஜன், ஆசிரியர்

## ஆடிக்கஞ்சி



ஆடி மாதம் வீசக்கூடிய காற்றின் வேகம் அதிகமாக இருக்கும். அதனால் எங்கும் தூசியாக இருக்கும். இதனால், இருமல் போன்ற நோய்கள் வரலாம். இதைத் தவிர்க்கவே மாரியம்மன் கோயில்களில் ஆடி மாதம் முழுவதும் கூழ் ஊற்றுவார்கள். இதை ஆடிக்கஞ்சி என்பர்.

அதிமதுரம், சீரகம், திப்பிலி, சின்ன வெங்காயம், திரிகடுகம், குன்னிவேர், உழிஞ்சி வேர், சீற்றாமுட்டி, கடலாடி வேர் இவற்றை லேசாகத் தட்டி எடுத்து, ஒரு வெள்ளைத் துணியில் கட்டி வைத்துக்கொள்ளவேண்டும்.

அரிசியைக் கஞ்சியாக வேகவைத்து அதில் இந்தத் துணியில் உள்ள மருந்துகளைப் பிழிய வேண்டும்; அல்லது, கஞ்சிக்குள் அந்தத் துணிப் பொட்டலத்தைச் சிறிது நேரம் போட்டு ஊறவைத்து, எடுத்துவிடவேண்டும். அதன்பிறகே ஆடிக் கஞ்சியைப் பரிமாற வேண்டும். இந்த முறையை எல்லாரும் பின்பற்றுவது நல்லது.

# கரூர் மாவட்டத்தில் பார்க்க வேண்டிய பத்து கோயில்கள்

### அருள்மிகு ரத்தினகிரீஸ்வரர் கோயில்

மூலவர்: ரத்தினகிரீஸ்வரர் (ராஜலிங்கம், வாள்போக்கி நாதர் )

அம்மன்/தாயார்: சுரும்பார்குழலி

இருப்பிடம்: கரூர் திருச்சி மார்க்கத்தில் உள்ள குளித்தலை சென்று அங்கிருந்துமணப்பாறை செல்லும் வழியில் அய்யர் மலை உள்ளது. நகரின் மத்தியில் கோயில் இருப்பதால் பக்தர்கள் எளிதாக கோயிலை அடையலாம்.

போன்: +914323245 522

பிரார்த்தனை: தங்கள் குல தெய்வம் தெரியாதவர்கள் ரத்தினகிரீஸ்வரரைதங்கள் குலதெய்வமாக வழிபடலாம். தவிர இங்கு இறைவனை வழிபட்டால் கல்யாண வரம், தொழில் விருத்தி, புத்திர பாக்கியம் ஆகியவை...

சிறப்பு: இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். 1178 அடி உயரமும் 1117 படிகள் கொண்ட மலை மீது அமைந்துள்ள மிகவும் சிறப்பு வாய்ந்த சிவதலம்.சித்திரை மாதங்களில் சூரிய கிரணங்கள் சுவாமி ...

### அருள்மிகு மாரியம்மன் கோயில்

மூலவர்: மாரியம்மன் (மகாமாரி)

இருப்பிடம்: கரூர் நகரின் மத்தியில் உள்ளது.

போன்: +914324 246 0146

பிரார்த்தனை: அம்மை முதலான நோய்கள், மற்றும் உடல் உபாதைகள், வழக்கு சிக்கல்கள், காணாமற் போன பொருட்கள், வியாபார சிக்கல் முதலியவற்றுக்கு இங்குள்ள அம்மனை வழிபட்டால் தீர்வு கிடைக்கிறது.

சிறப்பு: அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் நான்கு கரங்களுடன் கிழக்கு முகமாக சற்றே ஈசான்ய பார்வையுடன் அமர்ந்த நிலையில் அருள் பாலித்து வருகிறாள்.

### அருள்மிகு கல்யாணவெங்கட்ரமணர் கோயில்

மூலவர்: கல்யாணவெங்கட்ரமணர்

அம்மன்/தாயார்: ஸ்ரீ தேவி பூமிதேவி

இருப்பிடம்: கரூர் திண்டுக்கல் சாலையில் கரூர் நகரை ஒட்டினாற்போல தான்தோன்றி மலை இருப்பதால் பக்தர்கள் எளிதாக கோயிலை அடையலாம்.

போன் : +914324 2355531, 2365309

பிரார்த்தனை: உடம்பின் மீதுள்ள மரு ஏற்பட்டால் நிவர்த்தி செய்ய உப்பு மிளகு வெல்லம் போட்டு பெருமாளை பிரார்த்தனை செய்தல் வேண்டும். தவிர குழந்தை பாக்கியம், கல்யாண பாக்கியம் ஆகியவை ...

சிறப்பு: இங்கு பெருமாள் பாறையில் பிரம்மாண்டமான சுயம்பு மூர்த்தியாக நின்ற






நிலையில் எழுந்தருளியுள்ளார்.

### அருள்மிகு கல்யாணபசுபதீஸ்வரர் கோயில்

மூலவர்: பசுபதீஸ்வரர் (பசுபதிநாதர், பசுபதி, ஆனிலையப்பர்)

அம்மன்/தாயார்: அலங்காரவல்லி, சௌந்தர நாயகி, கிருபா நாயகி

இருப்பிடம்: கரூர் நகரின் மத்தியில் கோயில் அமைந்துள்ளது.

போன்: +91 4324 262 010

பிரார்த்தனை: ஆனிலையப்பரை வழிபட்டால் மனத்துயரம் நீங்கும். கல்யாண வரம், குழந்தை வரம் வேண்டுவோர் இங்கு வந்து வழிபடலாம். இத்தலத்து ஈசனை வணங்குவோருக்கு மனஅமைதி கிடைக்கும்.

சிறப்பு: இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார், சிறிது சாய்வாக உள்ளது. ஆவுடையார் சதுரமாக உள்ளது. மாசி மாதத்தில் ஐந்து நாட்கள் சுவாமி மீது சூரிய ஒளி படுகிறது.

### 5. அருள்மிகு அருங்கரை அம்மன் கோயில்

மூலவர்: அருங்கரை அம்மன்

இருப்பிடம்: கரூரில் இருந்து 30 கி.மீ., தூரத்தில் உள்ள சின்னதாராபுரம் சென்று, அங்கிருந்து மினிபஸ்களில் 10 கி.மீ., சென்றால் பெரிய திருமங்கலத்தை அடையலாம்.

போன் : +91 4320 233 344, 233 334, 94432 37320.

பிரார்த்தனை: குடும்பம் சிறக்க, விவசாயம் செழிக்க அம்பாளிடம் வேண்டிக் கொள்கின்றனர். காவல் தெய்வங்களுக்கு கிடா வெட்டியும், குதிரை பொம்மைகள் செய்து வைத்தும் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

சிறப்பு : அம்பாள் கோயில்களில் வழக்கமாக தரப்படும் மஞ்சள், குங்கும பிரசாதமும் இங்கு தரப்படுவதில்லை. அவளுக்கு நைவேத்தியம் தயாரிக்கும் அடுப்பிலுள்ள சாம்பலையே தருகின்றனர்.

### அருள்மிகு கடம்பவனேஸ்வரர் கோயில்

மூலவர்: கடம்பவனேஸ்வரர்

அம்மன்/தாயார்: முற்றிலா முலையம்மை

இருப்பிடம்: கரூரில் இருந்து 35 கி.மீ., தூரத்தில் குளித்தலை இருக்கிறது. பஸ் ஸ்டாண்டில் இருந்து நடந்தே சென்று விடலாம்.

போன்: +91 4323 225 228

பிரார்த்தனை: பெண்கள் இங்கு வேண்டிக் கொண்டால், அவர்களுக்கு சிவன் துணையாக இருந்து காப்பார் என்பது நம்பிக்கை. பொதுவாக பெண்கள் தங்களது அனைத்துக் குறைகளும் தீர இங்கு வேண்டுதல் வைக்கின்றனர்.

சிறப்பு: இங்குள்ள சிவன் வடக்கு நோக்கிய சுயம்புலிங்கமாக இருப்பது சிறப்பாகும். கருவறையில் லிங்கத்திற்கு பின்புறத்தில் சப்த கன்னியர்கள் இருப்பது தனி சிறப்பு.

### அருள்மிகு கல்யாண விகிர்தீஸ்வரர் கோயில்

மூலவர்: கல்யாண விகிர்தீஸ்வரர்

அம்மன்/தாயார்: பண்ணேர் மொழியம்மை

இருப்பிடம்: கரூரில் இருந்து அரவக்குறிச்சி செல்லும் சாலையில் 13 கி.மீ., தூரத்தில் ஆறுரோடு பிரிவிற்கு சென்று, அங்கிருந்து 8 கி.மீ., சென்றால் கோயிலை அடையலாம். குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் கரூரில் இருந்து சிட்டி பஸ்கள் செல்கின்றன.

போன்: +914324 262 010, 238 442,



பிரார்த்தனை: திருமண தோஷம், புத்திர தோஷங்கள் நீங்க இங்கு வேண்டிக் கொள்ளலாம். குறிப்பாக பெண்களின் கோபத்திற்கு, சாபத்திற்கு ஆளானவர்கள் தவறுக்கு மன்னிப்பு கேட்கு பிரார்த்திக்கலாம்.

சிறப்பு: கருவறையில் "விகிர்தீஸ்வரர்' நாகாபரணத்தின் கீழ் சுயம்பு மூர்த்தியாக கிழக்கு நோக்கி காட்சிதருகிறார்.

## அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி கோயில்

மூலவர்: பாலசுப்ரமணிய சுவாமி

இருப்பிடம்: கரூர் சேலம் மார்க்கத்தில் வேலாயுதம்பாளையம் உள்ளது. கரூரிலிருந்து நகரப் பேருந்து வசதி கோயிலுக்கு இருப்பதால் பக்தர்கள் எளிதாக கோயிலை அடையலாம்.

பிரார்த்தனை: இங்குள்ள முருகனை வழிபட்டால் கல்யாண வரம், தொழில் விருத்தி, புத்திர பாக்கியம், உடல் நலக் குறைவு நீங்குதல் ஆகியவை நிறைவேறுகின்றன. ஆயுள் பலம், கல்வி, அறிவு, செல்வம், விவசாயம் போன்றவை சிறக்கும்.

சிறப்பு: அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பட்ட தலம். விஷ்ணு துர்க்கை: இத்தலத்தில் உள்ள விஷ்ணு துர்க்கையை 12 வாரம் எலுமிச்சம் பழ விளக்கு போட்டு வணங்கினால் திருமண பாக்கியம் கிடைக்கும்.

## அருள்மிகு மகாலட்சுமி கோயில்

மூலவர்: மகாலட்சுமி

இருப்பிடம்: கரூர்குளித்தலை ரோட்டில் 20 கி.மீ., தூரத்தில் மகாதானபுரம் கிருஷ்ண ராயபுரத்தில் இத்தலம் அமைந்துள்ளது.

பிரார்த்தனை: திருமணத்தடை, குழந்தை பாக்கியம், கல்வியில் சிறந்து விளங்க இறைவனை பிரார்த்தித்தால் வேண்டுதல் நிறைவேறு.

சிறப்பு : இந்த அம்மன் கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணதேவராயரால் அமைக்கப்பட்டதாகும்.

## அருள்மிகு பாலசுப்பிரமணியர் கோயில்,

மூலவர் : பாலசுப்பிரமணியர்

இருப்பிடம் : கரூரில் இருந்து வெங்கமேடு வழியாக ப.வேலூர் செல்லும் வழியில் 5 கி.மீ., தொலைவில் கோயில் அமைந்துள்ளது.

பிரார்த்தனை: மலையின் அடிவாரத்தில் காமதேனுவால் அமைக்கப்பட்ட தேனுதீர்த்தத்தில் ஐந்து தினங்கள் நீராடி முருகனைவழிபட, பிள்ளையில்லா குறை தீர்வதுடன், தோஷங்களும் நீங்கும்.

சிறப்பு: தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், கரூர் பசுபதீஸ்வரர் கோயில் மற்றும் வெண்ணெய்மலை முருகன் கோயில் ஆகியவற்றில் மட்டுமே கருவூரார் சித்தருக்கு சன்னதிகள் உள்ளது.





# நந்தியின் சாபத்தால் அழிந்த ராவணன்

சிவனிடம் பெற்ற வரத்தின் பலனால், சகல உலகங்களையும் ராவணன் அடிமைப்படுத்தி வைத்திருந்தான். குபேரனையும் விட்டு வைக்கவில்லை, குபேரனிடமிருந்து புஷ்பக விமானத்தை பறித்து சென்றான்.

நவக்கிரகங்கள் கூட அவனுக்கு அடிமைப்பட்டிருந்தன. அவன் சிம்மாசனம் ஏறும் போது ஒவ்வொரு படியிலும், ஒவ்வொரு கிரகநாயகரும் வந்து படுத்துக் கொள்வார்கள். அவர்களின் முதுகின் மேல் அவன் ஏறிச்செல்வான். சிவபக்தர்கள், நவக்கிரகங்களைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை என்பது இதன் தாத்பர்யம்.

அவனது தந்தை விச்வரஸும் சிறந்த சிவபக்தர். வழிவழியாக சிவ பக்தர்களாக இருந்ததால், வலிமை மிக்கவர்களாக அவர்கள் விளங்கினர்.

சிவபெருமானின் வரத்தால், மிகுந்த சொகுசு வாழ்க்கை வாழ்ந்த இராவணன் குபேரனிடமிருந்து பறித்த புஷ்பக விமானத்தில், ஆணவத்துடன் வலம் வந்து கொண்டிருந்தான், இடையில் கயிலாய மலை குறுக்கிட்டது. அதைச் சுற்றிச் செல்ல ராவணனுக்கு கவுரவக் குறைச்சலாக இருந்தது.



வரம் தந்த சிவனின் இருப்பிடத்தையே அலட்சியப்படுத்தினான்.

அப்போது, கயிலாயத்தின் காவலரான நந்தீஸ்வரர், ராவணனிடம்,

"ராவணா! நீ சிறந்த சிவபக்தன் என்பதை நான் அறிவேன். இவ்வழியாக வருபவர்கள் கயிலாய மலையைச் சுற்றிச் செல்வதே வழக்கம், நீயும் அப்படியே செல். அதுதான் முறை" என்றார் பவ்வியமாக.

ராவணனுக்கு கோபம் வந்து விட்டது.

"காளை முகம் கொண்ட நந்தியை, குரங்கு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு, எனக்கே புத்தி சொல்கிறாயா! போடா குரங்கே!" என கடுமையான வார்த்தைகளால் திட்டினான்.

ஒருவர் அழகில்லாமலோ, உடல் குறையுடனோ இருந்தால் அவர்களின் குறையைச் சொல்லி அவமானப்படுத்துவது பெரும் பாவத்தைக் கொண்டு வரும்.

ராவணன் தேவையில்லாமல் நந்திஸ்வரரைத் திட்டியதால் அவனது தவவலிமை குறைந்தது.

நந்தீஸ்வரர் பெரும் வயிற்றெரிச்சலுடன், "ஏ ராவணா! என்னைக் குரங்கென்று பரிகாசம் செய்த நீயும், உன் தேசமும் அதே குரங்குகளால் அழிந்து போவீர்கள்!" என்று சாபமிட்டார்.

நாம் ஒருவரைப் பழித்தால், என்ன சொல்லி பழிக்கிறோமோ, அதே பழி நம்மையே திரும்பத் தாக்கும்.

அதன்படி இலங்கை ஆஞ்சநேயர் உள்ளிட்ட வானரங்களால் அழிந்தது நந்தியின் சாபத்தால்தான்.



# சுத்தமான சத்தான குடிநீர்

நம்முன்னோர்கள் இதுநாள் வரை நிலத்தடி நீரை குடிநீராக பயன்படுத்தி வந்தனர். முன்னோர் வழியில் அதையே நாமும் கடைபிடித்து வந்தோம்.

நம் உடலுக்கு தேவையான தாதுப் பொருள்கள் கிடைத்தது , உலகமையமாக்கள் கொள்கையால் குடிநீர் இன்று ஆண்டிற்கு 6000 கோடி ருபாய் ஈட்டும் வணிக பொருளாக மாறியுள்ளது.

இந்திய முழுவதுமாக பாட்டில் குடிநீர், கேன் வாட்டர் என அன்னிய கார்ப்ரேட் நிறுவனங்கள் மூலம் பாதுகாப்பு குடிநீர் என்று விளம்பரம் படுத்தப்படுறது.

இவ்வாறு பயன்படுத்தபடும் குடிநீரில் நாம் உடலுக்கு தேவையான தாது பொருள்கள் நிறைந்தவையா என ஆராய்ந்தால் இல்லையொன்ற பதில் மட்டுமே வருகிறது.

RO மற்றும் IV தொழில்நுட்பம் மூலம் தாதுப் பொருள்களை பிரித்து வெறும் சக்கை குடிநீராக கேனில் அடைத்து விற்பனை செய்யப்படுகிறது.

காசு கொடுத்து சக்கையை சாப்பிடுவதற்கு பதில் நாமே உயிரோட்டமுள்ள குடி நீரை இயற்கையின் துணையுடன் தயாரிக்கலாம்.

இந்த குடிநீரை உயிரோட்டமுள்ள நீராக மாற்றவும் மாறி வரும் கால நிலைக்கேற்ப்ப கோடை, மற்றும் மழை காலங்களில் தொற்று நோய்களிலிருந்து நமது குடும்பத்தை காக்கவும், இம்முயற்சியை நாம் செய்து பார்க்கலாம்.

- மிளகு 25 கிராம்
- சீரகம் 25 கிராம்
- தேத்தாங்கொட்டை 1
- வெட்டி வேர் சிறிது
- வெந்தயம் 20 கிராம்

இவைகளை துணியில் வைத்து கட்டி 15 லிட்டர் தண்ணீரில் போட்டு (படத்தில் உள்ளது போல) பயன்படுத்தலாம், மண் பாணை மிகவும் நல்லது.




தேற்றாங்கொட்டை பேச்சு வழக்கில் தேத்தாங்கொட்டை என்கிறார்கள்.

தேற்றாங் கொட்டை நீரைத் தெளிய வைக்கும் விதை என்ற பொருளைத் தருகிறது. சிலர் தேற்றா மரத்தின் காய்களை இடித்து கொட்டையை எடுத்த பின் கிடைக்கும் சக்கையைக் கரைத்து மீன்கள் உள்ள குட்டைகளில் இடுவர். இச்சக்கையின் சாறு மீன்களை ஒரு வித மயக்க நிலைக்கு இட்டுச் சென்று கரையில் ஒதுங்கச் செய்யும். இவ்வாறு மீன் பிடிப்புக்கும் தேற்றா மரம் பயன்படுகிறது

ஆற்றில் வரும் கலங்கல் நீரைப் பருகவேண்டிய நிலை வரும்போது, ஆற்றுநீரைக் கொண்டுவந்து பானையில் ஊற்றி அதில் தேத்தாங்கொட்டையைப் போட்டு வைப்பர். கலங்கல் அடியில் படிந்து தெளிந்த நீர் மேலே நிற்கும். அதனைத் மேலாக மொண்டு பருகுவர்.

பொற்கொல்லர்கள் பழைய அணிகலன்களில் படிந்துள்ள அழுக்கினைப் போக்கத் தேத்தாங்கொட்டையை ஊறிய நீரில் நுரை பொங்கத் தூரியத்தால் தேய்த்துத் தூய்மை செய்வர்.

இவ்வளவு சக்தி வாய்ந்த தேத்தாங் கொட்டையை மேற்கண்ட (மிளகு, சீரகம் வெட்டிவேர், வெந்தயம்) பொருட்களுடன் சேர்த்து நாம் குடிக்கும் நீரை சத்துள்ளதாக மாற்றினால், எந்த வித நோய் கிருமிகளும் நம்மை அண்டாது.

நாகரீகம் என்ற போர்வையில், நமது முன்னோர் பயன்படுத்திய பல்வேறு வழிமுறைகளை நாம் மறந்துவிட்டதால், மறக்கடிக்கப்பட்டு விட்டதால், இன்று ஒருசில கார்ப்ரேட் நிறுவனங்கள் செயற்கை முறையை பாதுகாப்பானது என்று கூறி மக்களிடம் காசு பார்க்க ஆரம்பித்துள்ளனர். இவை உடலுக்கு மனதுக்கும் தீங்காக அமைகிறது.

இனி வரும் நம் சந்ததியினராவது நன்றாக ஆரோக்கியமாக வாழ மீண்டும் நாம் நம் முன்னோர் காட்டிய வழிமுறைக்கு மாறுவோம். நம் சந்ததியினரின் ஆரோக்கியத்தை பேணிப் பாதுகாப்போம்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# 100% வெற்றி தரும் ஜென்ம நட்சத்திர ரகசியங்கள்



ஒவ்வொரு சாஸ்திர சம்பிரதாயத்தின் பின்னும் உள்ள காரணங்கள் அர்த்தம் பொதிந்தவை.

அந்த வகையில் ஒருவரது ஜாதகத்தை எடுத்துக்கொண்டால், லக்கினம் ஆன்மாவையும், சந்திரன் நின்ற ராசி எனப்படும் ராசி, இந்த உடலையும் குறிக்கும், சந்திரனானது ஒரு ராசியில், ஏதோ ஒரு நட்சத்திர பாதத்தில் இருக்கும், அதுவே பிறந்த நட்சத்திரம் ஆகும். பிறந்த நட்சத்திரம், அந்த நட்சத்திரத்துக்கு அதிபதி, இந்த உடலை இயக்குபவர்.

கர்ம வினைகளுக்கேற்ப இந்த உடல் அனுபவிக்கும் நன்மைகளுக்கு காரணமானவர்கள் இந்த ஜென்ம நட்சத்திரம், அதன் அதிபதி.

இதனாலேயே, குறிப்பாக ஆலய வழிபாட்டுக்கு மிக, மிக உகந்த தினமாக ஜென்ம நட்சத்திர தினம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதத்திலும் வரும் ஜென்ம நட்சத்திரம் அன்று கோவிலுக்குச் சென்று அர்ச்சனைகள் செய்து வழிபட வேண்டும் என்று சொல்லி வைத்தார்கள். அவ்வாறு வழிபடுவதால் நம் துன்பங்களின் தாக்கத்தை பெருமளவு குறைத்துக் கொள்ள முடியும்.

அனைத்து வித தோஷங்களுக்கும் பரிகாரம் செய்ய உகந்த நாட்கள் ஒவ்வொரு மாதத்திலும் வரும் ஜென்ம நட்சத்திரங்கள்.

**ஜென்ம நட்சத்திர தினத்தன்று செய்யப்படும் வழிபாட்டால், எந்த ஒரு தெய்வமும் அருள் செய்தே தீர வேண்டும் என்பது பிரபஞ்ச இறை சட்டமாகும்.**

ஜென்ம நட்சத்திர வழிபாட்டில் உள்ள ஆன்மீக ரகசியமே இது தான். எனவே ஜென்ம நட்சத்திர வழிபாடு வாய்ப்பை ஒரு போதும் தவற விட்டு விடாதீர்கள்.

குறைந்தபட்சம் ஆலயத்தில் ஒரு அகல் விளக்காவது ஏற்றி வழிபாடு செய்யுங்கள். ஜென்ம நட்சத்திரத் தினத்தன்று எந்த ஆலயத்துக்கு சென்று, உங்கள் ஜாதகம் மூலம், (தீமைகள் அகல, தோஷம் விலக ) எந்த கடவுளை வழிபடவேண்டும் என்று தெரிந்து வைத்து கொண்டு வழிபாடு செய்தால் கர்ம வினைகள் தீரும் என்பது குறிபிடத்தக்கது.

ஜென்ம நட்சத்திர பூஜை முடிந்ததும், ஏழை எளியவர்களுக்கு தானங்கள் செய்தால், அவரது பித்ருக்களின் மனம் மகிழ்ந்து முழுமையான ஆசி கிடைக்கும்.

ஜென்ம நட்சத்திர வழிபாட்டை ஒருவர் தொடர்ந்து செய்து வந்தால் அவரை கண் திருஷ்டி நெருங்காது. தடைபடும் செயல்கள் அனைத்திலும் ஜெயம் உண்டாகும்.

ஜென்ம நட்சத்திரத்தினத்தன்று அவரவர் தகுதிக்கு ஏற்ப ஆலயங்களில் மூலவருக்கு அபிஷேக ஆராதனைகள், சிறப்பு பூஜைகள் செய்வது நல்லது.

வசதி இருப்பவர்கள் ஜென்ம நட்சத்திரம் அன்று ஹோம வழிபாடு செய்தால் கூடுதல் பலனை பெற முடியும். ஜென்ம நட்சத்திர வழிபாட்டுக்கு அத்தகைய சக்தி உள்ளது.

ஜென்ம நடச்சத்திரத்தின் மகிமைக்கு உதாரணமாக இந்த கதையையும் கூறுகிறேன்.

வினை காரணமாக சிவபெருமானிடம் இருந்து பிரிந்து மாங்காட்டில் தவம் இருந்த பார்வதி தேவி, இறுதியில் தனது ஜென்ம நட்சத்திர தினத்தன்று மணலால் சிவலிங்கம் செய்து வழிபட்ட பிறகே கணவருடன் சேர்ந்து வாழும் நிலை உண்டானது. இதன் மூலம் ஜென்ம நட்சத்திரத்தின் மகிமையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் ஜென்ம நட்சத்திரம் எந்த தேதியில் வருகிறது என்பதை காலண்டரில் குறித்து வைத்துக் கொண்டு அன்றைய தினம் எவ்வளவு வேலை இருந்தாலும் சிறிது நேரம் ஒதுக்கி ஆலயத்துக்கு சென்று தனது ஜென்ம நட்சத்திரத்தை சொல்லி அர்ச்சனை செய்ய வேண்டும்.

அது ஜென்ம நட்சத்திரத்தை பலம் பொருந்தியதாக மாற்றும்.

நிறைய பேர் இதை அறியாமல் ஆங்கில தேதியை அடிப்படையாகக் கொண்டு பிறந்த தினத்தன்று ஆலயத்துக்கு சென்று வழிபாடு செய்கிறார்கள். இது தவறு.

**அதிலும் குறிப்பாக ஜென்ம நட்சத்திர திதியின் அதி தெய்வம் எது என்பதை அறிந்து வழிபட்டால் 100 க்கு 100 வெற்றியைப் பெறலாம்.**

பிறந்த நாளில் ஆத்ம திருப்திக்கு கோவில் சென்றாலும், அர்ச்சனை செய்யும் போது கூட, பிறந்த நட்ச்சத்திரத்தை கூறி அர்ச்சனை செய்கிறோமே தவிர பிறந்தநாளை யாரும் கூறுவதில்லை.

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

# குருவின் முக்கியத்துவம்

1. குருக்ருபாயோகம் ஒரு அறிமுகம்

இறைவனை அடைவதற்கு பல பாதைகள் இருந்தாலும் குருக்ருபாயோகமே ஆன்மீக பரிணாம வளர்ச்சியின் உச்சகட்டத்தை அடைவதற்கு உதவும் மிக முக்கியமான வழியாகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் புரிந்து கொள்ளவும், கற்றுக் கொள்ளவும், முன்னேற்றம் காணவும் நமக்கு உதவ வழிகாட்டி அல்லது ஆசிரியர் ஒருவர் இருந்தால் நன்றாக இருக்கும். இந்த பிரபஞ்ச விதிக்கு ஆன்மீக முன்னேற்றம் மட்டும் விதிவிலக்கல்ல. நித்தியமான குரு தத்துவம் (இறைவனின் கற்றுக்கொடுக்கும் தத்துவம்) மனித உருவிலிருக்கும் குரு ஒருவர் மூலம் செயல்பட்டு மாணவன் ஒருவன் விரைவாக ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைய உதவுகிறது.

எந்த ஆன்மீக பாதையாக இருந்தாலும், நாமாக முயற்சி செய்யும் பொழுது ஒரு குறிப்பிட்ட ஆன்மீக நிலை வரை மட்டுமே செல்ல முடியும். இதனை தாண்டி அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டுமானால் கண்டிப்பாக குருவின் அருள் அவசியமாகும்.

2. குருக்ருபாயோகத்தின் பொருள் விளக்கம்

க்ருபா எனும் வார்த்தை சமஸ்க்ருத ‘க்ருப்’லிருந்து வந்துள்ளது. க்ருப் என்றால் காருண்யம் என்று பொருள். க்ருபா என்பதை கருணை, தீட்சை வழங்குதல் அல்லது ஆசீர்வாதம் எனவும் பொருள் கொள்ளலாம். அதன்படி குருக்ருபாயோகம் என்பது குருவின் கருணையின் உதவியுடன் ஜீவாத்மாவானது பரமாத்மாவுடன் ஒன்றிணைதல் ஆகும்.

3. குருக்ருபாயோகத்தின் முக்கியத்துவம்

3.1 முன்னேற்றம் அடைவதற்கு எடுக்கும் காலம்

❖ குருக்ருபாயோகத்தினை பின்பற்றி ஆன்மீக முன்னேற்றம் அடைவதற்கு எடுக்கும் குறைந்த கால அளவே இவ்வழியின் மிக முக்கிய நன்மையாகும். ஒரு ஸாதகர் குருவின் பணியான ஆன்மீகத்தினை பரப்பும் காரியங்களை செய்து குருவின் அருளினைப் பெற்று விரைவான ஆன்மீக முன்னேற்றத்தினை அடைகிறார். குருவின் அருளைப் பெறுதலை வேறு எந்த உலக வெற்றிகளுடனும் ஒப்பிட முடியாது. இருந்தாலும் பின்வரும் உதாரணம் இதனை நன்கு புரிந்து கொள்ள உதவும். வறுமையில் வாடும் மாணவன் ஒருவன் தன்னுடைய கடும் உழைப்பால் கோடீஸ்வரன் ஒருவரின் கவனத்தைப் பெறுகிறான். அதன் பின் அக்கோடீஸ்வரர் மிகச்சிறந்த பல்கலைக்கழகம் ஒன்றில் அவன் சேர்வதற்கான அனைத்து செலவினையும் ஏற்கிறார் மற்றும் அவனது எதிர்கால வேலைவாய்ப்புக்களையும் பார்த்துக் கொள்கிறார்.

இதன் மூலம் பல வருடங்களாக வேலை செய்து மெதுவாக வேலைத்தளத்தில் உயர் வினை பெறும் காலம் சேமிக்கப்படுகிறது. அதுபோல் குருவின் அருளினைப் பெறும் இறைவனின் ஸாதகரும் மற்றைய ஆன்மீக பாதைகளில் செலவழிக்கும் பல வருட ஆன்மீக பயிற்சியினை சேமிக்கிறார்

❖ வேறு எந்தவொரு ஆன்மீக பாதையினில் ஆன்மீக பயிற்சி செய்தாலும் சராசரியாக ஒருவர் ஒரு வருடத்திற்கு 0.25% மட்டுமே முன்னேற்றம் அடைகிறார். குருவின் வழிகாட்டுதலில் ஆன்மீக பயிற்சி செய்தால் ஒருவர் ஒரு வருடத்திற்கு 23% வரை முன்னேற்றம் அடைய முடியும். குருவின் அருளினை ஒரு சிஷ்யன் பெற்றிருந்தால் அவனால் ஒரு வருடத்திற்கு 58% வரை கூட முன்னேற்றம் அடைவதற்குரிய சாத்தியக்கூறு உள்ளது.

3.2 ஒரு குறிப்பிட்ட நிலையினை தாண்டி முன்னேறுதல்

❖ சம்ஸ்க்ருதத்தில் ஒரு பிரபல கூற்று உள்ளது. ‘குருக்ருபா ஹி கேவலம் சிஷ்ய பரமமங்கலம்’, இதன் பொருள் என்னவென்றால் குருவின் அருள் ஒன்றால் தான் சிஷ்யன் தனது உச்சகட்ட பரிசான ஆன்மீக முன்னேற்றத்தை அடைய முடியும்.

❖ குருவின் அருள் இல்லாமல் ஒருவர் தன் மனம் மற்றும் புத்தியைக் கரைத்து மகானின் நிலையினை (அதாவது 70% ஆன்மீக நிலை) அடைவது இயலாது.

❖ குருக்ருபாயோகத்தை தவிர்த்து வேறு எந்த ஆன்மீக பாதையினை பின்பற்றினாலும் ஒருவரால் மனோ தேஹத்தையும் காரண தேஹத்தையும் மஹாகாரண தேஹத்தையும் பூரணமாக சுத்திகரிக்க முடியாது. அதனால் இந்த பாதைகள் எதுவும் இறுதி இலக்கான மோக்ஷத்தினை பெற்றுத் தரும் திறன் கொண்டிருக்கவில்லை.

❖ குருவின் அருள் ஒரு ஸாதகருக்கு இருந்தால்தான் அவர் பின்பற்றும் கர்மயோகத்தால், ஞானயோகத்தால் அல்லது பக்தியோகத்தால் அவரின் வாழ்வு அர்த்தமுள்ளதாக மாறும். அதன் பின்பு குருவால் பரிந்துரைக்கப்பட்ட ஆன்மீக பயிற்சியையே ஒரு சிஷ்யன் செய்வதால் அவருக்கு குருவருளின் பாதை மட்டுமே எஞ்சியுள்ளது. இறைவனை நோக்கி செல்லும் எல்லா பாதைகளின் உச்சக்கட்டத்தில் ஒரு ஸாதகன் இறுதி இலக்கான இறைவனோடு ஒன்றறக் கலக்க குருவருளே. துணை புரிகிறது.

4. குருவின் அருள் எவ்வாறு வேலை செய்கிறது?

குருவின் அருள் 2 வழிகளில் செயல்படுகிறது:

❖ ஸங்கல்பம் : எப்பொழுது குரு ஒருவர் ‘இந்த சிஷ்யன் ஆன்மீகத்தில் முன்னேறட்டும்’ என ஸங்கல்பம் செய்கிறாரோ அப்பொழுது தான் சிஷ்யன் உண்மையான ஆன்மீக முன்னேற்றத்தினை அடைகிறான். இதுவே குருவின் க்ருபை என குறிப்பிடப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நிகழ்வு நடப்பதற்கு குருவின் மனதில் ‘இது நடக்கட்டும்’ எனும் வெறும் எண்ணம் ஒன்றே போதும். வேறு எதுவும் தேவையில்லை. எனினும் இது 80% ஆன்மீக நிலையினை அடைந்த ஒரு மகானினால் மட்டுமே சாத்தியமாகும். 70% ஆன்மீக நிலையில் இருக்கும் மகான்களின் ஸங்கல்பம் பெரும்பாலும் சிஷ்யர்களின் உலக விஷயங்களுக்கு மட்டுமே சாதித்துத் தரக்கூடியது.

❖ இருப்பு : சிஷ்யனின் ஆன்மீகப்பயிற்சியும் முன்னேற்றமும் தானாக நடைபெறுவதற்கு குருவின் அருகாமை, அவரின் சகவாசம் அல்லது அவருடைய வெறும் இருப்பு ஒன்றே போதும். இதற்கு சிறந்த உதாரணம் சூரியன் உதிக்கும் போது எல்லோரும் விழிப்பு நிலை பெறுகின்றனர்; பூக்கள் மலர்கின்றன. இது சூரியனின் இருப்பினால் மட்டுமே நிகழ்கிறது. சூரியன் யாரையும் எழும்ப சொல்வதுமில்லை, அல்லது பூக்களை மலர சொல்வதுமில்லை. 90% ஆன்மீக நிலையினை அடைந்த குரு ஒருவரின் பணியும் இவ்வாறே நிகழ்கிறது.




5. குருக்ருபாயோகத்தின்படி ஆன்மீக பயிற்சி

இந்த பிறவியிலேயே ஆன்மீக முன்னேற்றம் அடைந்து, ஆன்மீக வளர்ச்சிக்கு பயிற்சி பெற www.spiritualresearchfoundation.org இந்த இணையதளத்தில் குருக்ருபாயோகத்தின் அவசியத்தை எஸ்.எஸ்.ஆர்.எப். பரிந்துரை செய்கிறது.

‘ஆன்மீக பயிற்சி‘ எனும் எங்கள் பக்கத்தில் இது பற்றிய விரிவான தகவல்களை நாங்கள் வழங்கியுள்ளோம்.

இவ்வருடம் குருபூர்ணிமா ஆடி மாதம் 5 ஆம் தேதி (21.7.2019), ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற உள்ளது.

இடம் : D.G. வைஷ்ணவ் கல்லூரி,
NO : 833, பூந்தமல்லி நெடுஞ்சாலை,
அரும்பாக்கம், சென்னை 600 106. நேரம்
: மாலை 5.30 தொடர்பு : 9884224668,
9003053054, 9380949626

மேலும் விவரங்கலுக்கு

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626


Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்
## மெயில் புக்




மாதம் தோறும் இரண்டு இதழ்களாக
(இ-புக் வடிவில்) வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும்
இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள்,
மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த
ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள்
படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

**மேலும் தகவலுக்கு 8825844033 என்ற
வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்**